# நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

**திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்**
**ஜூன் 2019 / ரூ.20**
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
**கொளத்தூர் மணி**
**விடுதலை இராசேந்திரன்**

வினியோகப் பொறுப்பு
**சூலூர் பன்னீர்செல்வம்**

இதழ் வடிவமைப்பு
**வெல்கின் கணினி**
**மா. தேன்ராஜ்**



அலுவலக முகவரி
**95, டாக்டர் நடேசன் சாலை**
**அம்பேத்கர் பாலம்**
**மயிலாப்பூர், சென்னை 600 004**
**தொலைபேசி எண்:**
**044-24980745**

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**இரா. உமாபதி**
**72992 30363**


# இந்து தேசியத்தை எதிர்கொள்வது எப்படி? விவாதங்கள் தொடங்கட்டும்!

இந்தியா இந்துக்களுக்கான தேசம் என்ற பெருமிதத்தோடு அதன் ''பெருமைமிகு'' பாரம்பர்யத்தை மீட்டெடுப்பதை அரசியல் முழக்கத்துடன் இணைப்பதே பா.ஜ.க. – சங்பரிவாரங்களின் அரசியலுக்கான அடித்தளம். அந்தக் கற்பிதங்களை உணர்வுகளாக்கி வாக்குகளாக மாற்றுவதில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

தேசப் பெருமையோடு தேசத்தின் பாதுகாப்பையும் சாதுர்யமாக பிணைத்துக் கொண்டுதான் பார்ப்பனியமும் தன்னைத் தொடர்ந்து ஆதிக்க சக்தியாகத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. 'மனுசாஸ்திரம் வர்ணாஸ்ரமம்' என்ற நஞ்சு – இந்த தேசக் கட்டமைப்புக்குள் எவரும் அடையாளம் கண்டு கொள்ளாமல் பதுங்கி நிற்கிறது.

பார்ப்பன கொடுங்கோன்மைக்கும் அதன் சமூக அரசியல் ஆதிக்கத்துக்கும் எதிராகப் போராடிய பெரியார், தேசிய எதிர்ப்பையும் அதில் ஏன் இணைத்தார் என்ற வரலாற்று உண்மை – இப்போது புரிந்திருக்கும். சமூக ஆய்வாளர்கள் பலரும் இப்போது இது குறித்து வெளிப்படையாக எழுதத் தொடங்கியிருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

**“தேசியம் என்பது பித்தலாட்டம்; வடமொழியை நுழைத்து, அதன் மூலம் வருணாசிரமத்தை நுழைத்து பெருமைமிக்க திராவிட மக்களைச் சூத்திரர்களாக்கி என்றென்றும் அடிமைகளாக ஆக்கி வைத்துக் கொள்ளப் பார்ப்பனர் கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம்தான் இது''** – என்றார் பெரியார்.

வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயிகள் அவலம், பணமதிப்பு இழப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட பாதிப்பு, ஜி.எஸ்.டி. வரிகளால் சிறு குறு தொழில்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், சிறுபான்மை மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகள், படுகொலைகள், சமூகப் பதட்டம் போன்ற மக்கள் பிரச்சினைகளையெல்லாம் ஓரம் கட்டிவிட்டு, இந்து தேசியத்தைப் பாதுகாக்கும் வலிமை மிக்க தலைவர் மோடி மட்டுமே என்ற எண்ண ஓட்டமே தேர்தலில் மேலோங்கி நின்றதற்குக் காரணம் என்ன? அதுவும் பகுத்தறிவு – சமூகநீதி சிந்தனைகள் விதைக்கப்படாத இந்தி பேசும் மாநிலத்தைச் சார்ந்தவர்களிடம் இந்த சிந்தனை ஒன்று மட்டுமே ஏன் அழுத்தமாக நின்றது? பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களிடம் தாங்கள் ஏன் சமூகத்தில் உரிமை மறுக்கப்பட்டவர்களாக்கப்பட்டோம் என்ற விழிப்புணர்வு உருவாகாமல் போனது ஏன்? 'இந்து' என்ற மத அடையாளத்துக்குள்ளேயே முகத்தைப் புதைத்துக் கொண்டு கிடப்பது ஏன்? இவை விவாதிக்கப்பட வேண்டும்.

திறந்த போட்டியில் முன்னேறிய சாதிப் பிரிவினருக்கு மட்டும் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கி, பார்ப்பன உயர்ஜாதி ஓட்டுகளை உறுதிப்படுத்திக் கொண்ட பா.ஜ.க., தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களையும் தந்திரமாக திசை திருப்பி, 'இந்து' என்ற மாய வலைக்குள் அவர்களையும் சிக்க வைத்து தங்களை ஆதரவாளர்களாக்கிக் கொண்டது எப்படி? ஒரே நேரத்தில் 'பூனைக்கும் எலிக்கும்' காவலர்களாக அரங்கேறிய நாடகத்தில் இவர்களால் எப்படி வெற்றி பெற முடிந்தது? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தேடினால் மீண்டும் பெரியாரியலுக்கே வரவேண்டியிருக்கிறது. 'இந்து தேசியம்' என்ற பார்ப்பன கொடுங்கோன்மையிலிருந்து மக்களை மீட்டெடுக்க விரும்பும் கட்சிகள் எதுவாக இருந்தாலும் அதற்கான 'மாற்று' எங்கே இருக்கிறது என்பதை ஆழமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.


- இந்து மதம் என்பது வேதமதம் தான். அது ஒடுக்கப்பட்ட இந்து மக்களின் உரிமைகளைத் தடுத்து நிறுத்தும் பார்ப்பனிய கோட்பாடுகளைக் கொண்ட மதமே தவிர அந்த மக்களுக்கு உரிமைகளை வழங்கக் கூடியது அல்ல.
- எனவே உரிமை மறுக்கப்பட்டவர்களாக இருக்கும் 'இந்து' வெகு மக்களின் சமூக நீதி – சம உரிமைக்கான போராட்டக் களத்துக்கு அவர்களைத் தயார்படுத்த வேண்டும்.
- இந்தியா என்பது ஒற்றைத் தேசமல்ல; பல்வேறு மொழி, கலாச்சாரம், பண்பாடுகளைக் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் வர்த்தக நலனுக்காக உருவாக்கப்பட்ட ஒரு உபகண்டம். எனவே இங்கே ஒவ்வொரு மாநிலத்துக்குமான தன்னாட்சி உரிமைகள் வழங்கப்பட வேண்டும். 'சுதந்திரப்' போராட்டக் காலத்திலேயே காங்கிரஸ் கட்சியே மாநிலங்களுக்கான தன்னாட்சியை வலியுறுத்தியது என்பது தான் வரலாறு.

தன்னாட்சி – சமூகநீதி – பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்ற கருத்துகளை மக்களிடம் விதைத்து இளைய தலைமுறைக்கு விழிப்புணர்வை உருவாக்கி, 'இந்து தேசியத்துக்குள்' பதுங்கி நிற்கும் பார்ப்பனியத்தை தனிமைப்படுத்த வேண்டும். இது குறித்து விவாதங்களை தொடங்க வேண்டும்.

# எந்த சங்ககாலப் புலவர்களின் பெயருக்குப் பின்னாலும் ஜாதி கிடையாது




**புலவர் செந்தலை கவுதமன்**



***நம்முடைய மரபு, செய்த தொழிலின் காரணமாக வந்த குடி மரபு! அந்தக் குடி இனக் குழுவானது, குல மானது. அதை இலக்கணப்படுத்தி வரையறுத்தபோது அது தான் திணை அமைப்பு. அந்த திணைக்குள்ளே நிலம் வரும், மக்கள் வருவார்கள். வாழ்க்கை முறையும் வரும். அந்த திணை வழி அமைப்பைத் தான் பிற் காலத்தில் ஜாதி ஆக்கி விட்டார்கள்.***

இந்த அரங்கத்தில் இருக்கின்றவர்களையெல்லாம் மத ரீதியாக அமருங்கள் என்று சொன்னால் ஒரு மூன்று அல்லது நான்கு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். ஜாதி ரீதியாக அமருங்கள் என்று சொன்னால் ஒரு நாற்பதுப் பிரிவுகளாக பிரிக்க வேண்டும். அனைவரும் தமிழர்களாக அமருங்கள் என்றால்! உட்கார்ந்துதான் இருக்கிறோம். தமிழ் நம்மை இணைக்கும்! ஜாதி நம்மைப் பிரிக்கும்! மதம் நம்மைப் பிளக்கும்! ஏன் நமக்கு இந்த இழிநிலை என்று எண்ணுவதற்கும், இப்படித்தான் இருந்தோமா என்று எண்ணுவதற்கும் தான் இப்படி ஒரு தலைப்பை வழங்கியிருக்கிறார்கள்.

சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட எந்த புலவனுக்கும், பெயர் இருக்குமே தவிர பெயருக்குப் பின்னால் ஜாதி இருந்தது கிடையாது. பெயருக்கு முன்னால் அவருடைய புலமையை, ஆற்றலைக் காட்டக்கூடிய ஒரு அடைமொழி இருக்கும். “கணக்காயர் நக்கீரனார்” ‘கணியன் பூங்குன்றனார்’ என்று தான்

இருக்கும். அதைத்தான் தொல்காப்பியர் சொல்கிறார், "சிறப்பினாகிய பெயர் நிலைக் கிளவி பின் இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" **சிறப்பிற்குரிய எந்த ஒரு அடை மொழியும் பெயருக்கு முன்னால் இருக்குமே தவிர பின்னால் இருக்காது. இப்போது பின்னால் போடு கிறார்களே, நாயுடு, கவுண்டர், தேவர் அது இழிந்தது என்ற பொருளை தொல்காப்பியர் சொல்லுகிறார்.** பெயருக்கு முன்னால் போடுவது மட்டுமே பெருமைக்குரியது. பெயருக்குப் பின்னால் போடுகின்ற எதுவும் இழிந்தது.

பெயருக்குப் பின்னால் போடுகின்ற ஜாதிப் பட்டம் எப்பொழுது அறிமுகமானது? 400 ஆண்டுகள் மட்டும் தான்!

ஜாதி என்பதினுடைய வரலாறே வெறும் எண்ணூறு ஆண்டு வரலாறு தான். ஜாதியின் வரலாறும் எண்ணூறு ஆண்டுதான். ஒரு சில ஜாதிக்காரர்கள் ஏதோ உலகம் பிறந்தது முதலே ஜாதி இருந்தது போல் பேசுகிறார்கள். 2000 ஆண்டுகளாக 1000 ஆண்டுகளாக அவர்களின் விருப்பத்திற்கேற்ப கூட்டிக் கொண்டே போகிறார்கள். ஜாதிப்பெயர் இருந்தது உண்மை! ஆனால் ஜாதி ஏற்றத்தாழ்வு என்பது வெறும் எண்ணூறு ஆண்டுகளாக இருப்பது என்பது தான் வரலாற்று உண்மை. பெயரிலே இருந்த ஜாதி என்பது பிறப்பு வழி ஜாதி அல்ல. அது தொழில் வழி ஜாதி. "ஈன்ரு புறந்தறுதல் என்றலைக் கடனே! சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே! வேல் முடித்து தருதல் கொல்லர்க்கு கடனே" சங்க இலக்கியத்தில் கொல்லன் உண்டு. நான்கு குடிகளாக நாம் இருந்தோம். 'துடியன், பாணன், பறையன், கடம்பனென்று இந்நான்கு அல்லது குடியுமில்லை'. நம்முடைய மரபு செய்த தொழிலின் காரணமாக வந்த குடி மரபு! அந்தக் குடி இனக்குழுவானது, குலமானது. அதை இலக்கணப்படுத்தி வரையறுத்தபோது அது தான் திணை அமைப்பு. அந்த திணைக்குள்ளே நிலம் வரும், மக்கள் வருவார்கள். வாழ்க்கை முறையும் வரும். அந்த திணை வழி அமைப்பைத் தான் பிற்காலத்தில் ஜாதி ஆக்கிவிட்டார்கள். ஊரைக் காவல் காத்தவன் "காமிண்டனாக" இருப்பான். கி.பி பதினோறாம் நூற்றாண்டு வரை காமிண்டன் தான். இன்றைக்கு அதனுடைய பெயர் 'கவுண்டன்'. காமிண்டன் தான் கவுண்டன் ஆனான். ஆக பதினோறாம் நூற்றாண்டுக்கு முன்னால் கவுண்டர் இல்லை. கள்ளர் உண்டு, மறவர் உண்டு, அகமுடையார் உண்டு, செட்டியார் உண்டு. வெளிநாட்டிற்கு போனால் செட்டி ஆவதும் உண்டு. செட்டி சேட் ஆவதும் உண்டு, சேட் சேட்ஜி ஆவதும் உண்டு. அதைத்தான் சொன்னார்கள் 'மூலமுதல்' எல்லாவற்றிற்கும் கொடுத்தோம். சொற்களைக் கொடுத்தோம் நாம். செய்த தொழிலின் காரணமாக அவர்களுக்குப் பெயரைக் கொடுத்தோம். எதிரிநாட்டுப் படையை கள்ளத்தனமாக ஆய்ந்து வருபவனுக்கு பெயர் 'கள்ளன்'. அரண்மனையின் செயல்களை பார்ப்பவன் அகமுடையன். எதிர்த்து நின்று போரிடுபவனுக்கு பெயர் மறவன். விளைகின்ற பொருளை செட்டாக வாங்கி அளவான விலையை வைத்து விற்பவனுக்கு பெயர் 'செட்டி'. நான் ஒய்வு பெற்ற ஆசிரியர். ஆசு என்றால் குற்றம். மாணவனிடத்தில் ஆசு இல்லாமல் செய்கிறவர் "ஆசிரியர்". அதே போல மரத்தில் இருக்கிற மாசு நீக்குகின்றவர், வாயால் நீக்க முடியாது அரிந்து எடுக்க வேண்டும் அவர் 'ஆசாரி'. சொற்பொருள் அடிப்படையிலே ஆசிரியரும், ஆசாரியாரும் ஒன்றுதான். ஆனால், இருவருக்கும் ஒரே மதிப்பா? இப்போது ஆசாரியென்றால் இழிவு என்று அதை விஸ்வகர்மா ஆக்கிவிட்டார்கள். கோனார் என்பது கூட யாதவர் ஆகி இப்போது யாதவ் ஆகிவிட்டது. நாடாரைக்கூட பண்டாரி ஆக்கக்கூடிய முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. காரணம் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கிற வாய்ப்பை நாம் வழங்காததுகூட காரணமாக இருக்கலாம்.

எல்லா ஜாதிக்கும் ஒரு காரணமுண்டு. சான்றோர் என்றால், இன்றைக்கு இருக்கிற சான்றோருக்கான பொருள் வேறு. சான்றாக வாழ்வோர் சான்றோர். ஆனால், சங்க இலக்கியத்தில் வேறு பொருள் உள்ளது. சங்க இலக்கியத்திலேயே சான்றோர் என்றால் வீரர். போர் வீரராக இருந்தவருக்கு பெயர் சான்றோர் . சான்றோர் தான் சாணார் ஆனார். சாணார் தான் நாடார் ஆனார். குந்தம் என்றால் போர்க் கருவி. போர்க் காலங்களிலே அவர் குந்தம் என்ற கருவியை ஏந்துவார். ஓய்வு காலங்களிலே குந்தம் என்ற கருவியைக் கொண்டு நெசவு செய்வார். அவர் தான் செங்குந்தர்! தந்தை அளவாக வணிகம் செய்கின்ற செட்டியாராக இருப்பார், அவருடைய மகன், எனக்கு உட்கார்ந்து செய்கின்ற வேலையெல்லாம் பிடிக்காது நான் வீரத்தோடு இருக்க வேண்டுமென்று ஊர்க்காவல் வேலையை செய்வான், அவன் கவுண்டனாக இருப்பான். அவனுடைய மகன் எனக்கு மரத்தினுள் கலை பொருட்கள் செய்ய ஆசை என்று அவன் ஆசாரியாக இருப்பான். இது தான் தமிழ்ச் சமூக

வரலாறு. மன்னர் கால வரலாறு. ஜாதி கட்டமைப்பு என்பது அப்படித்தான். தாத்தா ஒரு ஜாதி, மகன் ஒரு ஜாதி, பேரன் ஒரு ஜாதி என்பதுதான். பிறப்பு வழி ஜாதி என்பது அல்ல. தொழில் வழி ஜாதி. ஜாதிப் பெயர் உண்டு. பிறப்பு வழி ஜாதி என்பது பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின் தான். "யாயும் ஞாயும் யாராகி யரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், யானும் நீயும் எவ்வழி அறிதும், செம்புலப் பெயல்நீர்ப் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" அகமண முறை என்பது அப்போது இல்லை.

இந்த ஜாதியின் கொடிய பண்புகள் இந்த எண்ணூறு ஆண்டுகளாக வந்தவை. அதில் முதன்மை அகமணம். குறிப்பிட்ட பிரிவுக்குள் மட்டும் தான் திருமணம் செய்ய வேண்டும். நாலு பேர் என்ன சொல்லுவான் என்னைப் பற்றி! என்னுடைய ஜாதிப் பெருமை என்னாவது? என்கிறபொழுது தான் ஆணவக் கொலை வருகிறது. ஆணவக்கொலையைத் தான் கவுரவக் கொலை என்கிறார்கள். அந்த அகமண முறை தான் இன்றைக்கும் ஜாதியை இறுக்கமாக வைத்திருக்கிறது. இப்போது இன்னொரு கேள்வி வரும், ஏன் மதங்களில் இஸ்லாம் மதத்தில் பிரிவுகள் இல்லையா? உலகில் வேறு எங்கும் இல்லையா என்று, அங்கு பிரிவுகள் உள்ளது அடுக்குகள் இல்லை. இங்கு உள்ள ஜாதி அடுக்குமுறைக் கொண்டது. பிரிவுகள் சக்கரம் போன்றது மேலே உள்ளது கீழே வரும், கீழே உள்ளது மேலே வரும். அதில் சமத்துவம் உள்ளது. ஆனால் நம்முடைய ஜாதி முறை என்பது 'படிக்கட்டுகள் இல்லாத மாடிகள்' என்று அம்பேத்கர் சொல்லுவார். மேலேயும் போக முடியாது கீழேயும் போக முடியாது. அதில் அடைக்கப்பட்டவன் அடைக்கப்பட்டவன்தான். ஒவ்வொரு ஜாதிக்கும் பெருமையுண்டு! காரணம் எனக்குக் கீழே பலபேர் இருக்கிறான் என்று. இந்த அடுக்குமுறை என்பது தான் ஜாதியினுடைய கொடுமையான பண்பு.

அடுத்தது 'தீண்டாமை'. மற்ற நாடுகளிலே மதங்களிலே ஏதோ ஒன்றிலே பிரிவுகள் இருக்கலாம் ஆனால், தீண்டாமை கிடையாது. இங்கே இருக்கிற அனைவரும் தீண்டத் தகாதவர்கள் என்று சொல்வது வெட்கமானது தான் ஆனால் அது உண்மையானதும் தான். இங்கிருக்கிற யாருமே கோயிலின் கருவறையில் கால் வைக்க முடியாது. நன்கொடை கொடுக்க முடியும். கோயிலின் குடமுழுக்கு விழா நடக்கிறபோது, அந்த கலசத்திலே புனித நீரை ஊற்றுகிற உரிமை ஒரு ஜாதியினருக்கு மட்டுமே உண்டு. இந்து மதத்திற்கு இருக்கிற மடங்களிலே ஆதீனகர்த்தராவதற்கான உரிமை ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்தவருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு ஜாதிக்கும் இங்கே மடமுண்டு. அந்த ஜாதியில் பிறந்தவர் மட்டும் தான் அந்த மடத்தில் ஆதீனகார்த்தர் ஆக முடியும். மசூதியில் சென்று வழிபடுகின்ற போதுகூட, 'சலாமலேக்கும்' என்று கட்டிப்பிடித்துக் கொள்வார்கள். நெற்றியைத் தொட்டு வாழ்த்துவார்கள் ஒவ்வொரு மதத்திலும். இங்கே தான் பேர் சொல்லுங்கோ, நட்சத்திரம் சொல்லுங்கோ, கோத்திரம் சொல்லுங்கோ என்று கேட்பார்கள். ஜாதியையும் கேட்பார்கள். இந்த இழிவு என்பது, எண்ணூறு ஆண்டுகால இழிவு.

நமக்குள்ள பண்பாடெல்லாம் திணை நிலைப் பண்பாடு. இந்தத் திணை நிலைப் பண்பாடு உலகத்தில் எவருக்கும் இல்லை. அந்த திணை நிலை வாழ்க்கையிலே அய்ந்து திணை! குறிஞ்சியிலே வாழ்ந்தோம் குறிஞ்சியிலே வாழ்ந்த நமக்கு பெயர் குறவர்கள், வேடவர்கள், வேட்டுவர்கள், கானவர்கள் அது தான் பெயர். வேடு என்றால் மறைவு என்று பொருள். கிராமங்களிலே இன்றும் இரவு உணவு சாப்பிட்ட பின் வேடு கட்டியாச்சா என்று கேட்பார்கள். தஞ்சை, திருச்சி மாவட்டத்திலிருப்பவர்களுக்கு அது மிகுதி. கொங்கு மாவட்டதிலிருப்பவர்கள் வண்டுகட்டியாச்சா என்பார்கள். அந்த வேடு என்றால் மறைப்பது. நான் வேட்டி கட்டிருக் கிறேன், உடம்பை வேடு செய்வது, வேட்டி, வேட்டி தான் இப்போது வேஷ்டியாகிருக்கிறது. இப்போ அதுவும் போய்விட்டது 'தோத்தி' என்கிறார்கள். அதுபோல் தன்னை மறைத்துக் கொண்டு செய்வதற்கு பெயர் வேட்டை. அவருக்குப் பெயர் வேடுவர். இன்றைக்கு அது ஒரு ஜாதி! இன்றைக்கு அது ஒரு தொழில் பிரிவு. அப்பாவினுடைய ஜாதிதான் மகனுக்கும் உண்டு என்பது பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின் வந்தது. சட்டத்தினுடைய ஏற்பை, அரசினுடைய ஏற்பைப் பெற்றது கி.பி பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னால். அதனுடைய கொடுமையான வடிவம் உச்சம் பெற்றது பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னால். பெயருக்குப் பின்னால் ஜாதியைப் போடுவது வந்தது கி.பி பதினாறாம் நூற்றாண் டுக்குப் பின்னால். ஒவ்வொன்றுக்குமான வரலாற்றைச் சொல்ல முடியும். அதற்கான ஆதாரங்கள், தரவுகள் குவிந்து கிடக்கின்றன.

**ஜாதி என்பதினுடைய வரலாறே வெறும் எண்ணூறு ஆண்டு வரலாறு தான். ஜாதியின் வரலாறும் எண்ணூறு ஆண்டுதான்.**

இருந்தாலும் இது ஒரு அறிமுக மாநாடு பெரும் அறிஞர்கள் வந்திருக்கிறார்கள், அவர்கள் மத்தியிலே ஒரு சிறு செய்தியை சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன்.

அய்ந்து திணையிலே குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்தவர்கள் குறவர்கள். நாம் அனைவரும் குறவர்கள் தான். அப்போது தான் நாம் சாதுவான விலங்கு எது கொடுமையான விலங்கு எது என்று இனம் பிரித்து கண்டோம். சாதுவான விலங்குகளை மட்டும் ஓட்டிக்கொண்டு கீழே வந்தோம். அது தான் காட்டுப்பகுதி 'முல்லை'. முன்னே நடந்தது வேட்டை வாழ்வு; அடுத்து வந்தது முல்லை அது மேய்ச்சல் வாழ்வு. அங்கே நாம் ஆடு, மாடுகளை பார்த்துக் கொண்டிருந்த தனால் நமக்கு பெயர் கோனார். நாம் அத்தனை பேரும் கோனார் தான். கோன் தான், இடையர் தான். கீழே பார்த்தால் சமவெளி, மேலே பார்த்தால் மலை இரண்டிற்கும் இடையில் உள்ள காட்டுப் பகுதியில் வாழ்ந்த நமக்கு இடையர்கள் என்று பெயர். ஏராளமான இடையர்பாளையங் களை பார்க்கலாம். இடையர் என்ற சொல்லோடு கூடிய ஊர்களை, இடங்களை இன்றைக்கும் பார்க்கலாம். அதற்கு பின்னால் இருக்கிற வரலாறு இதுதான். அப்படி நாம் ஆடு மாடுகளை மேய்க்கச் சென்ற போது அங்கே நமக்கு அறிமுகமானது தான் விளைச்சல். ஏதாவது ஒன்றை வாயிலே வைத்து உருவி விட்ட பிறகு அது கசப்பாக இருந்தால் தூரம் எறிந்து விடுவோம். இனிப்பாக இருந்தால் மறுபடியும் இன்னொன்றை எடுத்து வைப்போம் உபரியாக இருப்பதை வீசி விட்டுச் சொல்வோம். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகு வந்து பார்த்தால் அங்கே வீசியவை கைப்பிடி அளவாக இருக்கும். ஆனால் கிடைப்பதோ மூட்டை மூட்டையாக இருக்கும். ஆகவே வேளாண்மை நமக்கு அறிமுகமாகி விட்டது. காடு இதற்குப் பயன்படாது, மலை இதற்குப் பயன்படாது, ஆகவே சமவெளி தேவை. அதனால் தான் நாம் மருத நிலத்திற்கு வந்தோம். மருத நிலம் தான் வேளாண் வாழ்வு அங்கே தான் நாகரிகமான வாழ்க்கை தொடங்கியது. முல்லை நிலத்திலேயே அரசு வந்துவிட்டது. மருத நிலத்தில் தான் வேலைப் பிரிவினை ஏற்பட்டது. அப்படி வேலைப் பிரிவினை ஏற்படுகின்ற போது தான், ஒவ்வொரு ஜாதிக்கும் சொல்லலாம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழில். இந்த அய்ந்து நிலத்திலே எல்லா நிலங்களும் இயற்கை நிலங்கள். செயற்கையாய், உழைப்பால் உருவான நிலம், உருவான திணை மருதத் திணை, அங்கே நாம் வீட்டைக் கட்டிக் கொண்டோம். மேட்டில் வேளாண்மை செய்தோம், பள்ளத்தில் வேளாண்மை செய்த நமக்கெல்லாம் பெயர் பள்ளர்கள். அத்தனை பேரும் பள்ளர்கள் தான். பள்ளம் வயலாகும். "பள்ளத்தில் பாடுபட்டோர் பள்ளர்கள் எனப்பட்டார் பண்போடு குள்ள மனம் கொண்ட கயவரெல்லாம் கூறுகின்றார் தாழ்வாக பண்டுமுதல் இன்று முதல் பார்". முக்கூடற் பள்ளு. இலக்கியங்கங்களே பள்ளு தான். பள்ளு என்றால் உழவு. பள்ளர் என்றால் உழவர். **இதனால் எல்லாருக்கும் தெரிவிப்பது என்ன வென்றால் என்று செய்தியை தெரிவிப்பவருக்குப் பெயர் பறையர். இன்றைக்கு அவர்களது பெயர் 'மீடியா பர்சன்' இரண்டு பேரும் ஒன்றுதான் என்று சொன்னால் ஒத்துக்கொள்வார்களா?** இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒன்று சொல்லலாம். எந்த ஜாதியும் மேலுமில்லை, எந்த ஜாதியும் கீழுமில்லை.


சங்க காலத்தில் இருந்து எட்டாம் நூற்றாண்டு வரை, எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் தீண்டாமை அறிமுகமானது, ஜாதி ஏற்றத்தாழ்வு அறிமுகமானது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அரசினுடைய ஏற்பைப் பெற்றது. பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகு நானூறு ஆண்டுகாலமாகத் தான் பெயருக்குப் பின்னால் ஒரு வால் தொங்குகிறது, ஜாதி வால். அந்த வாலை அறுத்தெடுத்தப் பெருமை தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் உண்டு. நீட் தேர்வு பட்டியலிலே வருகின்ற மாணவர்களின் பட்டியலில் பின்னால் இருப்பதைப் பார்த்தால் தேர்ச்சி பெற்று வரு கின்றவர்கள் யார் என்பதை காட்டிக் கொடுத்து விடும் அந்த வால். மேதா, படேல், ராவ், தேசாய், இப்படித்தானே போட்டிருக்கிறது. நம்முடன் பெயர் மட்டும் தானே இருக்கும். அங்கே பெயருடன் ஜாதி வாலும் இருக்கும். நம்முடைய இலக்கியத்திலே எவருடைய பெயருக்குப் பின்னாலும் ஜாதி வால் கிடையாது. இந்த ஜாதி என்பது தொழிலால் வந்தது. எந்த ஜாதியும் மேலுமில்லை, எந்த ஜாதியும் கீழுமில்லை. எந்த ஜாதியும் இழிவுமில்லை. ஒவ்வொரு ஜாதிக்கும்

இருக்கின்ற காரணம் உயர்வான காரணம். இதை நாம் இரண்டாக பிரித்தோம், இந்த அய்ந்து திணைகளிலுமே, மருதத்தில் இருந்தோம், மருதத்திலே இருந்த போது தான் அப்போது நில வழி வணிகம் அது பாலை நிலம். நீர் வழி வணிகம் நெய்தல் நிலத்தில் நடந்தது. கடலுக்குப் பெயர் பரவை. அதிலே இருந்தவர்களுக்குப் பெயர் தான் பரதவர். அவர் தான் மீனவர். இப்படித்தான் நாம் அமைத்துக் கொண்டோம். இவர்களுக்குப் பெயர் 'நிலைகுடி'. ஓரிடத்திலே தங்காமல் நாடோடி களாக வாழ்பவர்களுக்குப் பெயர் அலைகுடி. அப்படி இருந்தவர்கள் தான் பாணர்கள். பாணர்கள் வேறு, புலவர்கள் வேறு. இருவரும் சேர்ந்து எழுதிய இலக்கியம் தான் சங்க இலக்கியம். இரு தரப்பு பங்குமே அதில் உண்டு. அந்தப் பாணர்கள் இசை வைத்துப் பாடிவர்கள் இசைப்பாணர்கள். யாழ் வைத்துப் பாடியவர்கள் யாழ்ப்பாணர்கள். மண்டை போன்ற ஒரு பானையை பின்பக்கம் வைத்து தோலை முன் பக்கம் இழுத்து வைத்துப் பாடியவர் மண்டைப் பாணர். இப்படி பாணர்களுக்குள்ளும் பல வகை. அவர்களெல்லாம் "அலைகொடி". பார்ப்பனர்கள் என்பது அன்றைக்கு எல்லா ஜாதிக்குள்ளும் இருந்தனர். சுற்றுவட்டத்திலே ஒரு இடத்திலே அமர வைக்கப்பட்டவர்கள் அவ்வளவு தான். அவர்களை மையப்படுத்தி அனைத்தும் நடந்தது என்பது பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னால். மக்களுக்காக உருவாக்கப்பட்ட கோவில்களில் தங்களுடைய ஆதிக்க மையங்களை உருவாக்கிக் கொண்டார்கள் பார்ப்பனர்கள். தமிழ் அப்புறப்படுத்தப்பட்டு சமஸ்கிருதம், தேவ பாஷை, தெய்வ மொழி என்று மக்களை நம்பவைக்கப்பட்டு அதன்மூலம் இந்த நடைமுறை வந்தது. "தெய்வாதீனம் ஜகத்சர்வம் மந்த்ராதீனம் துதெய்வதம் தன்மந்தரம் பிராமணாதீனம் தஸ்மத் பிராமணாப் பிரபு ஜெயத்". உலகம் தெய்வத்துக்குள் அடக்கம். தெய்வம் மந்திரத் துக்குள் அடக்கம். மந்திரம் பார்ப்பனருக்குள் அடக்கம். அதனால் பார்ப்பனரே நம்முடைய தெய்வம் என்றாக்கி விட்டார்கள். இன்றைக்கும் பார்ப்பனரை சாமி என்கின்ற வழக்கம் இருக்கிறது. வீட்டுச் சடங்குகளுக்கு அழைக்கிற வழக்கம் இருக்கிறதென்றால், இடையிலே ஏற்பட்டது எல்லா வகையான அடிமைத்தனங்களுக்கும் தங்களுடைய வல்லான்மைக்கு கொண்டு சென்று விட்டார்கள். அதை இரண்டாகப் பிரித்தால் ஒன்று அரசு அதிகாரம், மற்றொன்று பண்பாட்டு அதிகாரம். அதாவது சமூக அதிகாரம். அந்த அரசு அதிகாரத்தை வழங்கக் கூடியவை படிப்பும், பதவியும். நமக்கு படிப்பு மறுக்கப் பட்டது. பதவி மறுக்கப்பட்டது.

இப்போது நாம் இந்த இரண்டையும் பெற்றுவிட்டோம் இந்த நூறாண்டு காலத்தில் மட்டும். படிப்பு பெற்றுவிட்டோம், அரசு பதவிகளும் ஓரளவுக்குப் பெற்றுவிட்டோம். ஆனால், சமூக அதிகாரத்தை நாம் இன்னும் பெறவில்லை. எண்ணூறு ஆண்டுகளாக, மன்னர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சமூக அதிகாரம் இன்றைக்கும் ஒரு ஜாதியின் கைக்குள் இருப்பது என்பது மிகவும் இழிவான உண்மை தான். இந்த பார்ப்பனர்கள் என்பதிலே, அறுவகைப்பட்ட பார்ப்பன பாக்கம் என்று வரும் அதிலே வேள்வி செய்கின்ற பார்ப்பனர்கள் வேறு. வேள்வி செய்யாத பார்ப்பனர்களுக்கு பெயர் வேளா பார்ப்பனர். வரலாறு என்பது வியப்பைத் தரும். வரலாறு அதிர்ச்சியைத் தரும். பார்ப்பனர்கள் என்றால் இன்றைக்கு சொல்லுகிற இந்த நிலைமையில் இல்லை. கபிலர் தன்னையே ஒரு அந்தணர் என்று சொல்லிக்கொள்வார். ஆனால் சங்க இலக்கியத்திலே கபிலர் சாப்பிட்டது இறைச்சி உணவு, மாமிச உணவு, புலால் உணவு. அன்றைக்கு வேளா பார்ப்பனர் என்றால், அவர்கள் வேள்வி செய்யாத பார்ப்பனர்கள். வளையல் அறுத்த பார்ப்பனர்கள் என்றெல்லாம் சங்க இலக்கியத்திலே வரும். அதற்கான சான்றுகள் இருக்கின்றன. அதிலே ஒரு பிரிவினர் மட்டும் தான் வேள்வி செய்தவர்கள், எல்லோரையும் போல இணையானவர்களாக கருதப்பட்டவர்களே தவிர, வருண முறை என்பது தமிழ்நாட்டில் இல்லை. அன்றைக்கும் இல்லை இன்றைக்கும் இல்லை. நமது நாட்டில் வைசிய மரபும் இல்லை, சத்ரிய மரபும் இல்லை. இரண்டே வருணம் தான் பிராமணர்கள், பிராமணர்கள் அல்லாதோர் சூத்திரர்கள். இந்த இரண்டே வருணம் தான் இங்கே இருந்தது. நால் வர்ண முறை இங்கே இல்லை. அந்த வருண முறை அடுக்கு என்பது அரசின் ஏற்பாக பன்னி ரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின் தான் வந்தது. அதிலிருந்து நாம் விடுவித்துக்கொண்டுள்ளோம். பழைய வரலாறு தெரிந்தால் விரைவில் இன்னும் நாம் நம்மை விடுவித்துக்கொள்வோம்.

**உலக தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய கருத்தரங்கில் நிகழ்த்திய உரை.**
**எழுத்தாக்கம்: மனோஜ்**

# பெரியார் தமிழுக்கு எதிரானவரா?



**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**பெரியார் தமிழ்மொழி எதிர்ப்பாளர் என்றும் தமிழைக் காட்டுமிராண்டி மொழியாகக் கூறியவர் என்றும் சமஸ்கிருதத்தை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனர்களும், சில தமிழ்த் தேசியத் தலைவர்களும் ஒரே குரலில் பேசி வருகிறார்கள். மிகச் சிறந்த தமிழறிஞர் பாவலேறு பெருஞ்சித்திரனார் இந்த அவதூறுகளை மறுத்து ஆற்றிய உரை இது.**

தந்தைப் பெரியார் ஒரு முழுப் பகுத்தறிவாளர். குமுகாயச் சீர்சிருத்தக்காரர். பழமை உணர்வு களையும் கொள்கைகளையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து, அவற்றைத் தவறு சரியென்று தேர்ந்து, நன்மை தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் மக்கள் அறிவியலாளர். புதுமை விரும்பி.

எனவே, தமிழ் மொழியையும் அவர் அறிவியல் கண்ணோட்டத்துடன் தான் அணுகினார். அது ஒரு பழைமையான மொழி என்பதற்காகவோ, சிறந்த இலக்கண இலக்கியச் செழுமை வாய்ந்தது என்பதற்காகவோ, அவர் அதைப் பாராட்டவில்லை.

அதில் உள்ள பாட்டு இலக்கியங்களையும், கதை இலக்கியங்களையும், வேறு சில கூறு களையும் மக்கள் மனநலன் அறிவுநலன் இவற்றுக்குப் பயன் தரும் வகையில் ஆராய்ந்தார். அவற்றிலுள்ள மூட நம்பிக்கைகளையும் மக்களுக்கு உதவாத பழமைக் கருத்துகளையும் அவர் ஏற்றுக் கொள்ள மறுத்தார். அவற்றைக் கடுமையாகச் சாடினார். பொதுவாக மக்கள் வாழ்க்கைக்குப் பயன் தராத எந்த மொழிக் கூறையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் தமிழ்மொழி புலவர்கள் பாங்கிலேயே அடைபட்டுக் கிடந்து, பொதுமக்கள் நிலைக்கு எளிமையாக பயன்படுத்த முடியாமல் இருப்பதை அவர் எண்ணி வருந்தினார். அதை அறிவியல் சிந்தனையுடன் முன்னேறுவதற்கு வாய்ப் பில்லாமல் சிறைபடுத்தி வைத்திருந்த பழமை விரும்பும் புலவர்களைக் கண்டித்தார். அவர்களுக்கு உணர்வில் உறைக்கும் படியாகத் தமிழ் மொழியை 'ஒரு காட்டுமிராண்டி மொழி' என்றும் கூறினார்.

பெரியார் தமிழ்மொழியைப் பற்றிக் கருத்துக் கூறும் பொழுதெல்லாம், அவர் அதைப் பற்றி ஏதும் தெரியாத வகையில் கருத்துக் கூறிவிட வில்லை. தமிழ்மொழியின் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முதல் திருக்குறள், கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம், புறநானூறு, நாலடியார் முதலிய பாட்டு, கதை இலக்கியங்கள், அறநெறி நூல்கள்வரை அவர் ஓரளவு கற்றிருந்தார். திருக்குறளையும், கம்ப ராமாயணத்தையும் அவர் நன்கு ஆராய்ச்சி முறையில் அறிந்திருந்தார். கம்பராமாயணத்தை வடமொழி வால்மீகி இராமாயணம், துளசிதாசு இராமாயணம், பௌத்த இராமாயணம் முதலியவற்றுடன் ஒப்பிட்டு, ஆராய்ந்து படித்துப் பல ஆராய்ச்சிக்

கட்டுரைகளையே பெரியார் எழுதியிருக்கிறார்.

பெரியார் நல்ல தமிழ்ப் பற்றுக் கொண்டவர். அவர் வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார் ‘தமிழர் தலைவர்’ என்னும் தம் நூலில் தந்தை பெரியாரின் தமிழ்ப்பற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், “பெரியார் வீட்டு மொழி கன்னடமாயினும், தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருப்பவர். அளவு கடந்த தமிழ்ப் பற்றுள்ளவர். தமிழ் மொழியைப் பேண வேண்டுமென்பதில் அவருக்கிணை எவருமிலர்” என்று எழுதுகிறார். தமிழ்மொழியேதான் திராவிட மொழிகளாக விளங்குகின்றது என்னும் கொள்கையுடையவர், பெரியார் அதைப் பற்றிக் கூறும் பொழுது அவர்,

“என் சிற்றறிவிற்கு, என் பட்டறிவிற்கு, ஆராய்ச்சிக்கு எட்டிய வரையில்,தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளன்றோ, அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை. ஒரே மொழி அதாவது தமிழ்தான் நாலு இடங்களிலும் நாலுவகையாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் கருதுகிறேன்” என்று கருத்தறிவிக்கிறார். தமக்குள்ள தமிழ்ப் பற்றைப் பற்றி அவரே 1939ஆம் ஆண்டில் கோவை மாணவர் மன்றத்தில் பேசிய சொற்பொழிவில் கீழ்வருமாறு விளக்கியிருக்கிறார்.

“தாய்மொழி என்பதற்காகவோ, நாட்டுமொழி என்பதற்காகவோ எனக்குத் தமிழ்மொழியிடம் எவ்வகைப் பற்றும் இல்லை. அல்லது தனிமொழி என்பதற்காகவோ, மிகப் பழைய மொழி என்பதற்காகவோ எனக்கு அதில் பற்றில்லை. பொருளுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்றுக் கிடையாது. அது மூடப்பற்று. குணத்தினாலும், அக்குணத்தினால் ஏற்படும் நற் பயனுக்காகவுந்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கிறேன்.

........என் தமிழ்ப்பற்றும் அதுபோல்தான். தமிழினிடத்தில் நான் அன்பு வைத்திருக்கின்றேன் என்றால், அதன்மூலம், நான் எதிர்பார்க்கும் தன்மையும், அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பேற்படும் அளவையும் எண்ணி மதிப்பிட்டே நான் தமிழ்மொழியிடம் அன்பு செலுத்துகிறேன்.

.... தமிழ், இந்நாட்டு மக்களுக்கு எல்லாத் துறைக்கும் முன்னேற்றமளிக்கக் கூடியதும், உரிமையளிக்கக் கூடியதும், மானத்துடனும் பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்க்கையளிக்கக் கூடியதும் ஆகும் என்பது எனது கருத்து. ஆனால் அப்படிப்பட்டவையெல்லாம் தமிழிலேயே இருக்கின்றனவா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லை என்றாலும் மற்ற பல இந்திய மொழிகளைவிட அதிகமான முன்னேற்றத்தைத் தமிழ்மக்களுக்கு அளிக்கக் கூடிய கலைகள், பழக்க வழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என அறிகிறேன். ஆதலால், தமிழுக்குக் கேடு உண்டாகும் என ஐயுறத்தக்க வேறு எந்த மொழியும் விரும்பத் தகாததேயாகும்”

**பெரியார் தமிழ்மொழியைப் பற்றிக் கருத்துக் கூறும் பொழுதெல்லாம், அவர் அதைப் பற்றி ஏதும் தெரியாத வகையில் கருத்துக் கூறிவிடவில்லை.**

தந்தை பெரியார் அவர்கள் சிறந்த பகுத்தறிவுச் சிந்தனையாளர் ஆகையால், எந்த கருத்தையும் ஆராயாது, அவர்க்குச் சரி என்று பட்டாலல்லாது, வெளிப்படையாகக் கூற மாட்டார். தமிழ்நாட்டில் பிறந்தவர்களுக்கு -தமிழர்களுக்குத் தாய்மொழியாகிய, தமிழ் மொழியிடத்தில் பற்று வேண்டும் என்று தந்தை பெரியார் மனவியல் முறைப்படி அறிவுறுத்தியிருக்கிறார். 1924 திசம்பரில் திருவண்ணாமலையில் நடந்த பேராயக் கட்சி மாநாட்டில் அவர் பின்வருமாறு பேசினார்.

“ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப் பற்றே யாகும். மொழிப்பற்று இராதவரிடத்து நாட்டுப்பற்று இராதென்பது உறுதி. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டியங்குவது. தமிழ்நாட்டில் பிறந்தவர்களுக்கு-தமிழர்களுக்கு தமிழ்ப்பற்று கட்டாயம் தேவை, தேவை என்று சொல்கிறேன்.

வங்காளிக்கு வங்க மொழியில் பற்றுண்டு. மராட்டியனுக்கு மராட்டிய மொழியில் பற்றுண்டு. ஆந்திரனுக்கு ஆந்திர மொழியில் பற்றுண்டு. ஆனால் தமிழனுக்குத் தமிழ் மொழியில் பற்றில்லை. இது பொய்யா? தமிழ் நாட்டில் தமிழ்ப் புலமை மிகுந்தவர்கள் எத்தனைப் பேர்? ஆங்கிலப் புலமையுடைய தமிழர்கள் எத்தனைப் பேர்? என்று கணக்கெடுத்தால் உண்மை விளங்கிப் போகும். தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதிருக்கும்வரை தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்”

தந்தை பெரியாருடைய இந்தக் கருத்து எவ்வளவு ஆழமானது. அறிவு சான்றது என்று தமிழரனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பெரியார் தமிழ்மொழியை மிகமிக எளிமையாகவும் இனிமையாகவும் பொதுமக்களிடம்

கையாண்டார். அவர் நினைத்த கருத்தைப் பேசு வதற்கென்று அவர் கையாண்ட சொற்கள் படிக்காத மக்களுக்கும் நன்கு புரியக் கூடியவை. அவர் தமிழ் மொழியை மிக இயல்பான முறையில், இன்னும் சொன்னால் கொச்சையாகக் கூட கையாள்வார். ஆனால் அதில் இனிமை இருக்கும். சுவையிருக்கும். கேட்போரை ஈர்க்கக் கூடிய கவர்ச்சியிருக்கும்.

தமிழ்மொழியை இவ்வாறு இயல்பாகவும் கொச்சையாகவும், கலப்பாகவும் பெரியார் பேசினாலும் அல்லது எழுதினாலும், தமிழ் மொழி தூய்மையாகக் கலப்பில்லாமல் பேசப்பட வேண்டும் என்பதில் அவருக்கு அக்கறையிருந்தது. ஆர்வம் இருந்தது. தமிழ்மொழியைக் கலப்பில்லா மல் தூய்மையாக எழுத வேண்டும் - பேச வேண்டும் என்பதில் பெரியார் வலிமையான கருத்துக் கொண்டிருந்தார். 1926 ஆம் ஆண்டு குடிஅரசு இதழிலும், 1937 ஆம் ஆண்டு பகுத்தறிவு இதழிலும் அவர் இப்படி எழுதுகிறார்.

“தமிழ்ப் புத்தகங்கள் தூய தமிழில் எழுதப்பட வேண்டும். சமசுக்கிருதச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழுக்குப் பெருமை குறைந்து போகாது என்றும், அப்படிக் கலப்பதுதான் மொழியின் முன்னேற்றம் என்றும் கூறி, பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று அமைவு சொல்லுவதோடு இதிலுமா சாதி வேற்றுமை என்கிறார்கள்.

அப்படியானால் ‘தண்ணீர் கொண்டு வா’ என்பதற்கு பகரமாக (பதிலாக) நம்மால் சரியாகப் பலுக்கவும் (அதாவது உச்சரிக்கவும்), எழுதவும், பழக்கமும் வாய்ப்பும் இல்லாத சமசுக்கிருதச் சொல்லாகிய ‘ஜலம் கொண்டு வா’ என்று சொல்வது குற்றமில்லையானால், ‘வாட்டர் கொண்டு வா’ என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? அப்புறம் தனித் தமிழ் என்ற சொல்லுக்கும், மொழிப் பற்று என்கிற சொல்லுக்கும் பொருள் தான் என்ன? இம்மாதிரி மொழி பற்றிலிருந்தே, இவர்களது நாட்டுப் பற்றின் தகுதியையும், அறிந்து கொள்ளலாம். பழையன கழிந்து, புதியன புகுவதாயிருந்தால், நமக்கும் கவலையில்லை. புதியவை வந்து வலுக் கட்டாயத்தில் புகுந்து கொண்டு, பழைய வற்றையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதானால், அதைப் பொறுத்துக் கொண்டு, அதற்குச் சார்பாகப் பேசுவதென்பது மொழிக்கு இரண்டக மும், இன வஞ்சகமும் ஆவதோடல்லாமல் தமிழ்த் தாயின் கற்பைத் தமிழ்ப் பகைவர்களுக்குத் தந்நலத் திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.” இத்தகைய கருத்துகள் எவ்வளவு துல்லியமானவை. துணிவு உடையவை.

பெரியாரின் மொழித்துறை ஈடுபாட்டுக்கும் தமிழ்மொழி பற்றி அவர் கொண்ட தெளிவுக்கும் அவர் சிறந்த தமிழ்ப் பேரறிஞர்கள்பால் கொண்ட தொடர்புகள் தான் காரணமாக இருந்தது.

மறைமலையடிகள், திரு.வி.க, சோமசுந்தர பாரதியார், கா.சுப்பிரமணியனார், சாமி சிதம்பரனார் போன்ற பெருமக்கள் தொடர்பும் துணையும் பெரியாருக்கிருந்தது.

திருக்குறள் பொதுமக்களிடமும் அறிஞர் களிடமும் இன்று பரவலாக வழங்குவதற்கும் பெருமையுற்றதற்கும் ஒருவகையில் பெரியார்தாம் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. திருக்குறளுக்காக மாநாடுகளை நடத்திய முதல் பேரறிஞர் அவர். தமிழ் விழாவான பொங்கல் விழாவைப் பொதுமக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடும்படி செய்தவரும் பெரியார்தாம். தமிழ்மொழிக்கு ஊறுநேரும்படி பிற மொழி களைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்பதைத் துணிவுடன் எதிர்த்தவரும் பெரியார் தாம்.

வேறு மொழியைக் கல்வி மொழியாக்குவதால், தமிழ்மொழியின் வளர்ச்சி குன்றும், தமிழ் மக்களின் முன்னேற்றமும் தடைபடும் என்று 1926 இலேயே ‘குடிஅரசு’ இதழில் கண்டனம் தெரி வித்தார். மொத்தத்தில், பெரியார் ஈடுபாடு கொண்ட அரசியல், பொருளியல், குமுகாயவியல் முதலிய துறைகளில் போலவே தமிழ்மொழித் துறையிலும், பலவகையான முன்னேற்றக் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இன்று அரசு கொண்டுவந்துள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு முதன்முதல் வழி வகுத்துக் கொடுத்தவரும் அதை நடைமுறைப் படுத்தியவரும், தந்தை பெரியார்தாம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தமிழினத்திற்காக மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கும் தொண்டு செய்த பேரறிஞர் பெரியார். உலகிற்கே பயன்படுகின்ற வகையில் அரிய கருத்துக்களை வெளிப்படுத்தியவரும், மக்கள் தொண்டாற்றியவருமாகிய பெரியார், தமிழ் மொழியில்தான் பேசினார். தமிழ்நாட்டில் தான் பிறந்து வாழ்ந்தார் என்பது நமக்கெல்லாம் பெருமையன்றோ! வாழ்க பெரியார்

-தென்மொழி, சுவடி-18, ஓலை-8,1982
(17.9.1981 அன்று சென்னை தொலைக்காட்சியில்
‘வண்ணக்களஞ்சியம்’ நிகழ்ச்சியில் பேசியது.)

# இஸ்லாம் அறிவியல் மதமா? (2)

# சூரியனைச் சுருட்ட முடியுமா?

அறிவியல் மதம் என்ற உரிமைக்கு எந்த மதமும் சொந்தம் கொண்டாட முடியாது. இஸ்லாம் மதத்தில் அறிவியலுக்கு எதிரான கருத்துகளை அலசுகிறது கட்டுரை. - கடந்த இதழின் தொடர்ச்சி



**சூரியனை சுருட்டமுடியுமா?**

குர்ஆனில் சூரியனைப்பற்றி வருகிறது. இதைப்பற்றி ஆடியோ புகழ் பி.ஜே அவர்கள் குர்ஆன் வசனங்களை எடுத்து, "இஸ்லாத்தில் அறிவியல்" என்ற புத்தகத்தை வெளியிட்டிருந்தார். குர்ஆன் வசனங்களைப் போட்டு நியாயப்படுத்தியிருந்தார். அதில் சூரியனைச் சுருட்டுவது என்ற வசனம் குர்ஆனில் வருகிறது. சூரியனை எப்படி சுருட்டுவது? அது உவமானமாகக்கூட இருக்கலாம். ஆனால் இவர்கள் அதை நியாயப் படுத்த சுருட்டலாம் என்று சொல்கிறார்கள். கோள வடிவில் உள்ளதை எப்படி சுருட்ட முடியும்? உவமானமாக சொன்னதை திசை திருப்புவதுதான் இது போன்ற செயல்கள் அனைத்தும்.

**காலநிலை மாற்றங்கள் நரகத்தின் பெருமூச்சா?**

உலகத்தில் காலநிலைகள் எப்படி மாறுபடுகிறது என்று ஹதீசில் விடை கிடைக்கும். ஹதீஸ்: 1088 அபுஹுரைரையார் கூறியதாவது: அல்லாவின் தூதர் அவர்கள் கூறியது வெப்பம் ஏற்படும் போது வெப்பம் குறையும்வரை தொழுகையைத் தாமதப் படுத்துங்கள். ஏனெனில் கடுமையான வெப்பம் நரக பெருமூச்சின் காரணமாகவே உண்டாகிறது என்று கூறிவிட்டு நரகம் தனது இறைவனிடம் மேற்கண்ட ஹதீஸில் உள்ளவாறு முறையிட்டது. அதற்கு இறைவன் ஒரு மூச்சு குளிர்காலத்திலும், மற்றொரு மூச்சு கோடை காலத்திலுமாக இரு மூச்சுகள் விட்டுக் கொள்ளுமாறு கூறினார். நரகம் விடும் பெருமூச்சுக் காற்றின் காரணமாகவே புவியில் பருவகால மாற்றம் ஏற்படுகிறது என்ற மிகப்பெரிய அறிவியல் உண்மையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது அல்லா தனது தூதருக்கு அறிவித்தது. இதை எந்த அறிவியல் புத்தகத்தில் தேடினாலும் கிடைக்காத அற்புதமான விளக்கம் என்று பி.ஜே. தனது புத்தகத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளார். சாதாரணமாக பள்ளியில் அறிவியல் பாடம் படித்தவர்களுக்கு, பூமியில் மழை எப்படி வருகிறது, குளிர் எப்படி ஏற்படுகிறது, வெப்பம் எப்படி ஏற்படுகிறது என்பது பற்றியெல்லாம். சாதாரணமாக படித்தால் கூட இவையெல்லாம்

எப்படி ஏற்படுகின்றது என்பது தெரிகிறது. இது வெறும் நம்பிக்கை சார்ந்த ஒன்றுதானே தவிர இதில் வேறெதுவும் இல்லை. அன்றைய காலத்தில் அறிவியல் கிடையாது. வெறும் நம்பிக்கைதான். ஆனால் அன்றைய காலத்து விசயங்களை தற்போது அறிவியலுடன் நியாயப்படுத்தும் போது தான் மதம் என்பது கேள்விக்குள்ளாவது மட்டுமல்ல கிண்டலுக்குரியதாகவும் ஆகிறது. கிருஸ்துவம் ஆரம்பகாலத்தில் இதைச் செய்தது. இப்போதும் அதையேத் தான் செய்கிறது. அய்ரோப்பாவில் பெரிய கூட்டமே இருக்கு. இதை பரப்பி விடுவதற்கு. அறிவியலுடன் இஸ்லாத்தை ஒப்பிட்டு நியாயப்படுத்துவதற்கு. தொழுகைக்கு முன்னால் உடலை சுத்தப்படுத்துவார்கள். அதில் தலையை மூன்று முறை தண்ணீரை வைத்துத் தொடுவார்கள். அதைப் பற்றி சமீபத்தில் ஒரு செய்தியைப் பார்த்தேன் அய்ரோப்பாவில் ஒரு முஸ்லிம் அல்லாத விஞ்ஞானி, இதைப் பார்த்து இது உங்கள் மதவழக்கமா என்று கேட்டதாகவும், அதை ஆராய்ந்து நரம்பு மண்டலங்கள் உறுதி யாகவும், தலைக்கு ஒரு புத்துணர்ச்சி கொடுக்கக் கூடியதாகவும் உள்ளது என்று அவர் ஆய்வு செய்து கூறியதாகவும் ஒரு செய்தியைப் பார்த்தேன். இவையனைத்தும் 99% வதந்தி. நான் ஏன் 99% என்று சொல்கிறேனென்றால் மீதி ஒரு சதவீதம் திசை திருப்பல்கள். வேறு ஒரு கண்டு பிடிப்பை திசை திருப்ப இப்படி புனையப்பட்டு பரப்பி விடுகிறார்கள்.

**நீல் ஆம்ஸ்ட்ராங்க் இஸ்லாமியரா?**

மிக முக்கியமாக நீல் ஆம்ஸ்ட்ராங்க் நிலவுக்கு போனதைப்பற்றி தெரியும். இஸ்லாத்தில் ஒரு 30 வருட காலங்களாக, தகவல் தொழில் நுட்பங்கள் வளராத காலகட்டத்தில் பரப்பப் பட்டு வந்தது என்னவென்றால், நீல் ஆம்ஸ்ட்ராங் இஸ்லாத்தைத் தழுவிவிட்டார். என்ன காரணம்? நிலவுக்கு சென்றவுடன் "வாங்கு" சத்தத்தைக் கேட்டார் என்றார்கள். சாதாரணமாகவே தெரியும். ஒலி எங்கே பரவும்? காற்றிருந்தால்தான் ஒலி பரவும். நிலவில் காற்று கிடையாது. அதை இவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். காற்றில்லாத இடத்தில் எப்படி ஒலியைக் கேட்க முடியும்? இது நீண்ட நாட்களுக்குப் பின்தான் வதந்தி என்று தெரிய வந்தது. தகவல் தொழில் நுட்பங்கள் வளராத கால கட்டத்தில் இஸ்லாமிய உலகில் இந்த வதந்தி மிக நீண்ட காலமாக இருந்தது. இளம் வயதில் நானும் இதை நம்பிக்கொண்டிருந்தேன். அதனால் தான் தைரியமாக சொல்கிறேன்.

அடுத்து, இஸ்லாமிய பெண்களின் கணவர் இறந்தால், நான்கு மாதம் பத்து நாட்களுக்கு 'இத்தா' என்று ஒன்று உள்ளது. இரத்த உறவுகளைத் தவிர அவர்களை வேறு யாரும் பார்க்கக் கூடாது. அவர்களை வீட்டிற்குள் அடைத்து வைத்து விடுவார்கள். அதற்கு என்ன நியாயத்தை இவர்கள் சொல்கிறார்களென்றால், அவர்கள் கருவுற்றிருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டறியத்தான் இந்த நான்கு மாதம் பத்து நாட்கள் என்ற காலகட்டம் என்கிறார்கள். இது எதற்கு என்பது நீண்ட நாள் சந்தேகமாக இருந்தது. இதை ஆராய்ந்து பார்த்தோம். அன்றைய காலகட்டத்தில் அதாவது ஏழாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் சித்த மருத்துவம் மட்டும் இருந்த காலகட்டத்தில், இங்கே மருத்துவச்சிகள் பெண்களின் நாடியைப் பிடித்து கருவுற்றிருக்கிறார்களா இல்லையா என்பதை கூறிய காலகட்டம் அது. ஆனால் ஏழாம் நூற்றாண்டில் அரேபிய நாடுகளில் இது போன்ற வசதிகள் கூட இல்லை. அவர்களுக்குத் தெரிந்த ஒரே மருத்துவம் குர்ஆன் வசனங்கள் மட்டும்தான்.

காய்ச்சலா, தலைவலியா குர்ஆன் வசனங்களை ஓதினால் போதும். இன்றைக்கும் அதுபோன்ற நம்பிக்கை இருந்து வருகிறது. கிருஸ்துவத்திலும் கூட பெந்தகொஸ்தே பிரிவினர் நோய் வந்தால் மருத்துவமனைக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். இரத்த தானமும் செய்ய மாட்டார்கள், இரத்தம் ஏற்றவும் விட மாட்டார்கள் இப்படி ஒரு சில பிரிவினர் கிருஸ்துவத்திலும் இருக்கிறார்கள். அதேபோல் இந்த நாலு மாதம் பத்து நாட்களை நியாயப்படுத்துவதற்குத் தற்போது, இலண்டன் மருத்துவர் கண்டுபிடித்ததாக ஒரு செய்தி இணையத்தில் வலம் வருகிறது. இஸ்லாமியப் பத்திரிக்கைகளும் இதை எழுதின. 'சமரசம்' என்ற புகழ்பெற்ற இஸ்லாமியத் தமிழ்ப் பத்திரிக்கை இதை எழுதியது. மனிதனின் விந்தணுக்கள் பெண்களின் கருப்பையில் இருக்கும் காலம் நான்கு மாதம் பத்து நாட்கள் ஆகும் என்ற ஆய்வை இலண்டன் மருத்துவர் கண்டுபிடித்ததாகப் பரப்பினார்கள். அதனால்தான் 'இத்தா' இருக்க வைப்பதாக நியாயப்படுத்தினார்கள். இதை வைத்து இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்பே இதை சொல்லிவிட்டது என்று தங்களின் மதத்தை

நிலை நிறுத்த அறிவியலை இழுத்துக் கொண்டனர். இதை இலங்கையில் உள்ள ஒரு தோழர் ஆராய்ந்து அதில் உள்ள மோசடியை வெளியில் கொண்டு வந்தார். அதாவது இலண்டன் மருத்துவர் என்று இவர்கள் குறிப்பிட்டது போல் அப்படி ஒரு நபரே இல்லை. இலண்டன் மருத்துவர் என்று இவர்கள் காட்டிய புகைப்படம் எகிப்தில் உள்ள இஸ்லாமிய அறிஞரின் புகைப்படம். அவரை டாக்டராக மாற்றி ஆங்கிலத்தில் பரப்பியதை தற்போது தான் தமிழில் மொழி பெயர்த்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதை நம்பி இஸ்லாமிய பத்திரிக்கைகள் வரை எழுதிவிட்டன. இந்த மோசடியை அவர் வெளியிட்ட பின்பும் அதை யாரும் இதுவரை மறுக்கவில்லை. நான் எனக்கு தெரிந்த சில மத அறிஞர்களிடமும் இதை கேட்டேன் அவர்கள் தெரியாது என்று கூறி விட்டனர்.

**உலக விஞ்ஞானிகள் மதத்துக்கு வெளியே உள்ளனர்!**

எனவே அறிவியல் என்பது நம்பிக்கை களுக்கு எதிரானது. நம்பிக்கைகளைத் தாண்டித் தான் அறிவியல் வளர்ந்திருக்கிறது. உலக வரலாற்றிலேயே விஞ்ஞானிகள் என்பவர்கள் அனைவருமே கிட்டத்தட்ட 90% பேர் பகுத்தறிவாளர்கள். சமீபத்தில் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு நடைபெற்றது. வரலாற்றுரீதியிலான ஆய்வு. உலக வரலாற்றில், வரலாறு அறியப்பட்ட காலகட்டத்திலிருந்து, இன்றுவரை தோன்றிய ஆளுமைகள், வரலாற்று அறிஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், கவிஞர்கள் இவர்கள் ஏன் மதத்தை விட்டு வெளியில் இருக்கிறார்கள், மத நம்பிக்கையற்றவர் களாக இருக்கிறார்கள் அல்லது பகுத்தறிவாளர் களாக இருக்கிறார்கள் என்ற ஒரு ஆய்வு. அதில் ஒரு முக்கியமான விசயத்தை கண்டுபிடித்தார்கள், விஞ்ஞானிகள் அல்லது அறிவு ஜீவிகள் என்பவர்கள் மதத்தை விட்டு வெளியே இருப்பதற்கும், மதத்தைத் தாண்டுவதற்கும், நம்பிக்கையற்று இருப்பதற்கும் காரணம், அப்போதுதான் அவர்களால் அடுத்த கட்டத்திற்கு சிந்திக்க முடிகிறது; ஒரு கடப்பு நிலையை அவர்களால்தான் உருவாக்க முடியும். அதனால் தான் அற்புதமான கண்டுபிடிப்புகளை அவர்களால் நிகழ்த்த முடிகிறது. எப்போதும் மதம் சார்ந்த முன்முடிவுகள், நம்பிக்கைகள் ஒரு மனிதனுக்குள் புகுந்துகொண்டால் அன்றிலிருந்து அவன் சிறந்த விஞ்ஞானியாக உருவாக முடியாது. இந்தியாவில் நடந்த அறிவியல் மாநாட்டில் கட்டுரை வாசித்த விஞ்ஞானிகள் யாரும் விஞ்ஞானிகளே கிடையாது.

**இஸ்லாமிய நாடுகளில் குறிப்பிடத்தக்க விஞ்ஞானிகள் உருவாகாமல் போனதற்கு காரணமே மத நம்பிக்கைகள்தான்.**

**தொழில்நுட்பவாதி விஞ்ஞானி கிடையாது!**

இந்தியாவை எடுத்துக்கொண்டோமானால் அறிவியலில் இரண்டு, மூன்று தரம் இருக்கிறது. அறிவியலின் Application தான் Engineering (பொறியியல்). Engineering-இன் Application தான் Technology. இவையனைத்தையும் போட்டுக் குழப்பி அனைவரையும் விஞ்ஞானிகள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அப்துல் கலாமை எடுத்துக்கொண்டால் கூட அவர் Scientist கிடையாது அவர் Technocrate (தொழில் நுட்பவாதி) தமிழில் மொழி பெயர்க்கும் போது விஞ்ஞானி என்று சொல்கிறார்கள். விஞ்ஞானத் திற்கும் தொழில்நுட்பத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்ட கோட்பாட்டை எடுத்துக் கொண்டுதான் ஒரு தொழில்நுட்பவியாளன் ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்துகிறான். அதை வைத்துதான் ஏதாவது ஒரு கருவியை உருவாக்குகிறான். ஆனால், ஒரு விஞ்ஞானி என்பவன் மிக ஆழமாக சிந்திக்கிறான், இயற்கையை அவதானிக்கிறான். அதைத் தாண்டிப் போக முற்படுகிறான். ஆக தொழில் நுட்பவியாளன் என்பவன் மதவாதியாக இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.** ஆனால் உலகத்தில் தோன்றிய தற்போதைய விஞ்ஞானிகள் வரை, ஸ்டீபன் ஹாக்கிங், ரிச்சர்ட் டாக்கின்ஸ், கார்ல் சாகன் மற்றும் அய்ன்ஸ்டீனாகட்டும் மதத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இயங்கு கிறார்கள். காரணம் என்னவென்றால் அவர்களால் தான் தங்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும். சிந்தனைக் கடப்பு நிலையை அவர்களால் தான் உருவாக்க முடியும். இஸ்லாமிய வரலாற்றில் கூட ஆரம்ப காலத்தில் கலியுகத்தில்

நிகழ்த்தப்பட்ட கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்தவர்கள்கூட மதத்திற்கு அப்பாற்பட்டவர் களாகத்தான் இருந்திருக்கிறார்கள். பெயர் மட்டும் தான் முஸ்லீம் பெயராக இருந்திருக்கிறது. சில அரசுகள் அவர்களை ஆதரித்திருக்கின்றன, சில அரசுகள் அவர்களின் பெயரை வெளியே தெரியாமல் கொல்லவும் செய்திருக்கின்றன. இப்படி வரலாற்றில் இரண்டு சம்பவங்களும் நடந்திருக்கிறது. இஸ்லாமிய நாடுகளில் இது போல் குறிப்பிடத்தக்க விஞ்ஞானிகள் உருவாகாமல் போனதற்கு காரணமே இது போன்ற மத நம்பிக்கைகள்தான். காரணம் அவன் முன் முடிவுகளை வைத்துக்கொண்டுதான் அவன் அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்த முடியும். இஸ்லாம் சார்ந்த எந்த முன்முடிவும் இல்லாமல் அவன் எந்த கண்டுபிடிப்பையும் நிகழ்த்த முடியாது. இப்போது, பிறப்பால் முஸ்லீமான ஒருவன் 'ஹலால்' "முறைப்படி அறுத்தலைப் பற்றி" சுதந்திரமாக ஆய்வு செய்ய முடியாது. ஒரு வேளை ஆய்வு செய்து முடிவுகளை வெளி யிட்டால் அவன் இஸ்லாமிய அரசால் கொல்லப்படுவான். இதுதான் நடக்கும். இதை வைத்துதான் இஸ்லாம் ஒரு அறிவியல் மார்க்கமா என்பதை நாம் பார்க்க வேண்டும். மலேசியாவில் உள்ள ஜாகிர்நாயக் மிக பிரபலமானவர், குர்ஆனில் அறிவியல் உள்ளது, ஹதீஸில் அறிவியல் உள்ளது என்று காணொளி வெளியிட்டுக் கொண்டே இருப்பார். அதை இங்கு WhatsApp-களில் பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

**தேனீ பழங்களிலிருந்து தேன் எடுக்குமா?**

குர்ஆனில் மிக முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்பு உள்ளது என்கிறார்கள். பழங்காசு சீனிவாசன் என்ற மார்க்சிய வரலாற்று ஆய்வாளர். இஸ்லாம் பற்றி ஆழமான படிப்பு கொண்டவர். அவர் இஸ்லாமிய கூட்டங்களில் கலந்து கொண்டு இந்த கேள்வியைக் கேட்கும்போது பதில் சொல்லாமல் நழுவியுள்ளார்கள். அது என்னவென்றால், குர்ஆனில் பழங்களில் இருந்து தேனீக்கள் தேன் எடுப்பதாக ஒரு வசனம் வருகிறது. ஆனால் தேனீக்கள் பூக்களில் இருந்துதான் தேனை எடுக்கிறது. குறிப்பாக பெரிய பழங்களில் இருந்து தேன் எடுப்பதாக வசனம் வருகிறது. அன்றைக்கு இருந்தது பெரிய பழம் அது மஞ்சளாக இருந்தது. தேனின் நிறமும் மஞ்சள்; அதனால் இதிலிருந்துதான் வந்திருக்கும்

**குர்ஆனில் பழங்களில் இருந்து தேனீக்கள் தேன் எடுப்பதாக ஒரு வசனம் வருகிறது. ஆனால் தேனீக்கள் பூக்களில் இருந்துதான் தேனை எடுக்கின்றன.**

என்ற முடிவுக்கு வருகிறார்கள். அப்போதும் சிலர் இதைக் கேள்வி கேட்டுள்ளனர். அவை மறைக்கப் பட்டுவிட்டது. இப்போதைய இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தில் கேள்வி கேட்பவர் களுக்கு, அதை மறைக்க அதில் (குர்ஆன் வசனத்தில்) ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகின்றனர் அது என்னவென்றால், அடைப்புக்குறிக்குள் 'மலர்களின் கனிகளுக்குள்' என்று மொழி பெயர்ப்பாளர்கள் மாற்றுகின்றனர். கனிகள் என்று தொடங்கிய வசனத்தை மலர்களின் என்று மாற்றிவிட்டார்கள். அடுத்த கேள்வி என்னவென்றால் கனிகள் இல்லாத மலர்களிலிருந்து கூட தேனீக்கள் தேன் எடுக்கும். கனகாம்பரம், பிச்சிப்பூ போன்றவை உள்ளனவே என்று கேட்டால் எந்த பதிலும் இல்லை. இப்படியாக அறிவியல் பூர்வமாக நியாயப் படுத்தும் மோசடியான வேலையைச் செய்கிறார்கள். எனவே இஸ்லாம் மட்டுமல்ல உலகில் உள்ள எந்த மதமானாலும் அறிவியலை வைத்து மதங்களை நியாயப்படுத்த முடியாது.

மதம் என்பது வெறும் நம்பிக்கை சார்ந்தது. உளவியலாளர்கள் ஒரு உண்மையைக் கண்டு பிடித்துள்ளனர். குழந்தைகள் நான்கு முதல் அய்ந்து வயதில் வளரும் போது மதம், ஜாதி ஊட்டப்படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் கடவுளைக் கற்பிக்கும் போதுதான் சிறு மூளையில் ஆழமாக பதிகிறது. அதனால்தான் அந்த நம்பிக்கையிலிருந்து வெளியே வருவது என்பது மிக சவாலான விசயமாக உள்ளது. மூன்று பெரிய மதங்களில் (கிருத்துவம், இஸ்லாம், இந்து) இருந்து வெளியே வருவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. ஆழமான வாசிப்பும், அவதானமும் மட்டும் தான் அதிலிருந்து வெளியே கொண்டு வரும். எனவே நம்பிக்கை வேறு அறிவியல் வேறு நம்பிக்கையையும் அறிவியலையும் ஒருபோதும் கலக்க முடியாது.

மார்ச் 24, 2019 அன்று கோவையில்
ஃபாரூக் நினைவு நாள் கருத்தரங்கில் நிகழ்த்திய உரை




# ‘புனிதங்’களை பகடிகளால் தகர்த்த திராவிட இலக்கியங்கள்



பேராசிரியர் ராஜ் கவுதமன்

**பார்ப்பனியத்தையும் வைதீக இந்து மதத்தையும் அதன் வருணாசிரமத்தையும் பகடி மூலம் தலைகீழாக்கிய பெரியாரின் சொல்லாடலில் தவிர்க்க முடியாதபடி, பெண்ணியத்துக்கும், தலித்தியத் துக்குமான கூறுகள் இடம்பெற்றுள்ளன.**

மிகவும் பவித்திரமானவற்றுக்கு எதிரானது சிரிப்பு என்பார் பக்தின். ரொம்பவும் சீரியஸானது, பவித்திரமானது என்று உயர்த்திப் பிடிக்கிற பண்பாட்டில் அச்சம், மடமை, பலவீனம், ஒடுக்குமுறை, பொய், கபடம், வன்முறை, எச்சரிக்கை, தணிக்கை, தடை, அச்சுறுத்தல் ஆகிய அம்சங்கள் உள்ளூற உறைந்திருக்கும். இவை அதிகாரத்தைக் கட்டமைப்பவை. இவை கபட வேஷ முகமூடியை அணிந்திருக்கும் என்பார் பக்தின்.

இந்த முகமூடியைக் கிழித்துவிடும் ஆற்றல் கொண்டவை: சிரிப்பு, வசை, முட்டாள்தனம், இங்கிதமின்மை, கேலி, கிண்டல், பகடி. இவற்றால் கும்மாளமிடுகிற சிரிப்பு, ஒருக்காலும் மக்களை ஒடுக்காது; குருடாக்காது. இந்தச் சிரிப்புதான், என்றைக்கும் மக்களின் கைகளில் ஒரு சுதந்திரமான ஆயுதமாக இருக்கும். அதிகாரபூர்வமான, பவித்திரமான, புனிதமான, 'சீரியஸான' பண்பாட்டால் விலக்க, பழிக்க, ஒடுக்கப்பட்ட மக்கள் தொகுதியின் சிரிப்பு, அவர்களைப் புறவயமான தணிக்கையிலிருந்து மட்டுமின்றி, அதற்கு முந்தி மாபெரும் அகவயமான தணிக்கையிலிருந்தும் விடுவிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் புனிதம், விலக்கு, அதிகாரம் பற்றி அம்மக்களிடம் வளர்ந்து வந்த 'அச்சத்திலிருந்து' அவர்களை விடுவிக்கிறது.

பக்தின் மேற்கோளிடுகிற ஹெர்சன் என்பவர் சிரிப்பைப் பற்றிக் கூறும்போது, 'சம அந்தஸ்துடையவர்களே தமக்குள் சிரிக்கத் தகுதி உள்ளவர்கள்; உயர்ந்தவர்களுக்கு முன் தாழ்ந்த வர்கள் சிரித்தால், சிரிக்க அனுமதிக்கப்பட்டால், உயர்ந்தவர்களின் மரியாதை விடைபெற்றுவிடும்' என்பார். 'எபிஸ்' கடவுளுக்கு முன் மனிதர்கள் சிரிக்கிறபோது அந்தக் கடவுளின் புனிதப் பெறுமதி அகன்று போகிறது, அதோடு, அந்த 'எபிஸ்' கடவுள் ஒரு சாதாரண மாடாக இறங்கி விடுகிறது என்பார் ஹெர்சன்.

உன்னதமானவற்றை உன்னதமில்லாத வர்கள் கேலிசெய்து சிரிக்கிறபோது, உடன் நிகழ்ச்சியாக உன்னதங்கள் தலைகீழாகப் புரட்டப் படுகின்றன. சர்வ வல்லமை பெற்றவையாக உள்ளவை இந்தப் பகடியின் மூலமாக சாமானியமானவையாக ஆக்கப்படுகின்றன. உயர்ந்தவற்றின் அசாதாரணத் தன்மைகள் அகற்றப்படுகின்றன. மாற்றத்துக்காகக் குரலிடும் சாமானியர்களின் மருகிப்போன தன்னிலைகள் களிப்படைகின்றன. மனச்சுமை, குத்தல், குற்ற உணர்வு, பயம் எல்லாம் கழன்று, தன்மானமும் சுயமரியாதையும் ஏற்படுகின்றன. குழு உணர்வும் போர்க் குணமும் இணக்கமும் கைகூடுகின்றன.

இந்தியச் சூழலில், திராவிடர்கள், தலித்துகள், பெண்கள் ஆகியோரின் கேலிக்கு

**சித்தர்களின் பகடி, மதத்துக் குள்ளேயே மற்றொரு மாற்று மதத்தை உண்டாக்கும் இலக்கினையே கொண்டிருந்தது. ஆனால், திராவிட இலக்கியத்தின் பகடி, இந்து மதத்தையே நிர்மூலம் ஆக்கும் இலக்கைக் கொண்டிருந்தது, ஆட்சி அதிகாரம் என்ற மதத்தைக் கைப்பற்றும் வரை.**

உள்ளாக்கப்படுகிற புனிதங்கள் யாவும் ஒற்றுமை கொண்டவையாக இருக்கின்றன. மூன்று தரப்பினரும் மனுதர்மம், பௌராணிக வைதீகம், ஆணாதிக்கப் பார்ப்பனியம் ஆகியவற்றைத் தங்களது குறியிலக்காகக் கொண்டு தாக்குகின்றனர். அதாவது, பெரியார் செய்த பகடிக்கு இலக்கானவர்களும் - இலக்கானவையும், தலித் மற்றும் பெண்ணியவாதிகளின் பகடிக் குள்ளாகக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லலாம். பார்ப்பனியத்தையும் வைதீக இந்து மதத்தையும் அதன் வருணாசிரமத்தையும் பகடி மூலம் தலைகீழாக்கிய பெரியாரின் சொல்லாடலில் தவிர்க்க முடியாதபடி, பெண்ணியத்துக்கும், தலித்தியத்துக்குமான கூறுகள் இடம்பெற்றுள்ளன.

தங்களை ஒடுக்கப்பட்ட சூத்திரர் என்றும் (வேசையின் புத்திரர்கள்), திராவிடர் என்றும் (மொழிக் குடும்பம்), தமிழர் என்றும் (தேசிய இனம்) அணி திரட்டிய இயக்கத்தாரின் (வேளாளர் குறிப்பாக) இலக்கியத்தில் கௌரவமும் புனிதமும் பவித்திரமும் கொண்ட பார்ப்பனக் கடவுள், வேதம், மடாதிபதி, தம்பிரான், பூசாரி, இதிகாச மாந்தர் அனைவரும் பகடியின்மூலம் பலத்த நகைப்புக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். இந்துப் பண்பாட்டில் சீரியஸானவையாகக் கருதி, மதிக்கப்பட்ட அனைத்தையும் அனைவரையும் நகைப்புக் குள்ளாக்கும் கலகத்தைத் திராவிட இலக்கியமே தொடங்கிவைத்தது. இதற்கு முன் தமிழகத்தில் சித்தர்கள் இதனைச் செய்தார்கள்தான். ஆனால், இவர்களின் பகடி, மதத்துக்குள்ளேயே மற்றொரு மாற்று மதத்தை உண்டாக்கும் இலக்கினையே

கொண்டிருந்தது. ஆனால், திராவிட இலக்கியத்தின் பகடி, இந்து மதத்தையே நிர்மூலம் ஆக்கும் இலக்கைக் கொண்டிருந்தது, ஆட்சி அதிகாரம் என்ற மதத்தைக் கைப்பற்றும் வரை.

**அண்ணாவின் இலக்கியக் கலகம்**

அண்ணாவின் 'வேலை போச்சு' என்ற சிறுகதையில் வைதீகம், புரோகிதம், சந்நியாசம் முதலான பவித்திரங்கள், ஒரு திருமண அழைப்பிதழில் கவனக்குறைவாக நேர்ந்துவிட்ட அச்சுப்பிழைகளின் மூலமாக நக்கல் செய்யப்படு கின்றன. 'சாமி காவடியானந்தா' என்பது 'காமி சாவடியானந்தர்' என்றும், 'வேதம்' 'பேதம்' என்றும், பிழையாக அச்சாகின்றன. இந்தப் பெயர்களில் புனையப்பட்டுள்ள பெருமை களெல்லாம், எழுத்துகளை இடம் பெயர்த்து வைத்த மாத்திரத்தில் தலைகீழான பண்பை அடைந்துவிடுகின்றன. கனம் ஏற்றப்பட்ட வார்த்தைகளின் அமைதியை - ஒழுங்கை - வரிசையை - இலக்கணத்தை நையாண்டித் தனமாகச் சீர்குலைக்கிறபோது, அப்படிப்பட்ட வார்த்தைகளுக்கும் அதிகாரத்துக்கும் (இந்த வார்த்தை இன்று பழுத்துப் பழசாகிவிட்டது) இடையில் கட்டமைக்கப்பட்ட சம்பந்தம் துண்டிக்கப்படுகிறது. கூடவே, இவற்றால் கட்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் மனங்களும் அவிழ்க்கப்படுகின்றன. கலக இலக்கியத்தின் பிரதானப் பணி இதுதான்.

கதாபாத்திரங்களுக்குப் பெயர் சூட்டு வதிலும் அண்ணா உன்னதங்களைத் தலை கீழாக்கியுள்ளார். புவனேஸ்வரி, கல்யாணி, தமயந்தி, திலகா, கோகிலம், ரமாமணி முதலிய வடமொழிப் பெயர்கள், வைதீகப் பெண் கடவுள் மற்றும் பதிவிரதையைக் குறிப்பன. புனிதம், தெய்வீகம், அழகு, மேன்மை போன்ற உன்னதங்களைக் குறிக்கும் இப்பெயர்களை அண்ணா, வேசைகளுக்கு இட்டுள்ளார். 'வேலை போச்சு' கதையில் வரும் 'வியாசர்' பத்திரிகை ஆசிரியர் அனுமந்தராவ், இவர் மனைவி சீதை, துணை ஆசிரியர் கருடாழ்வார். அனுமந்தராவ் உண்மையில் எதைக் குறிக்குமோ தெரியாது. ஆனால், படித்ததும் அனுமனை உணர்த்திவிடுகிற பெயர். இவ்விதத்தில் அனுமன், சீதை, கருடன் என்பவை வைணவ இதிகாசப் பாத்திரங்கள். ராமன் என்ற அவதாரப் புருஷனுக்கு (புருடன் - தனித்தமிழ்) தர்மபத்தினி சீதை. ஆனால், அண்ணாவின் கதையில் சீதை, இராமனின் சேவகனான அனுமனின் 'பத்தினி'.

திராவிட இலக்கியத்தின் உதயத்தோடுதான் இலக்கியச் சொல்லாடலுக்குள், விபச்சாரிகள், விடன், திருடன், மில் தொழிலாளி, வண்டிக் காரன், வேலைக்காரி, கூலிக்காரன், ஏழை ஆகியவர்கள் வந்தார்கள். அங்கீகரிக்கப்பட்ட வற்றையே ஏற்றுப் பழகிப் போனவர்களுக்கு அங்கீகரிக்கப்படாதவர்களாக, தரமற்றவர்களாக, திறனற்றவர்களாக, ஒழுங்கற்றவர்களாக இவர்கள் தோன்றுவார்கள். இவர்களும் இவர்களைப் பற்றிப் பேசுபவர்களும் அதிகாரபூர்வமானவர் களின் பார்வையில் போக்கிரிகளாக, கிறுக்கர் களாக, ஒழுங்கீனர்களாகத் தோன்றுவார்கள். பண்டித ஜவஹர்லால் நேருவுக்குப் பெரியார் எப்படித் தோன்றினார்? அன்று பெரியார், அண்ணா, கருணாநிதி, பாரதிதாசன் போன்றவர்கள், அக்கால காங்கிரஸார் - பார்ப்பனர்கள் பார்வையில் நீசர், ஒழுங்கீனர், கீழ்ச்சாதியர், கண்ணியக் குறைவானவர் என்றுதான் பட்டார்கள்.

இவர்களின் படைப்புகள் தரமற்றவை, தகுதியற்றவை, வெறும் பிரச்சாரம் என்ற உன்னதக் கலை இலக்கியப் பீடத்தார்களால் தீர்ப்பிடப் பட்டன. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குந்தகமாகி விட்டன; இதனால், தரமான இலக்கியம் வளர முடியாமல் போய்விட்டது என்ற ஒப்பாரி எழுந்தது; இது இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

**உன்னத இலக்கியம் எனும் ஒடுக்குமுறை**

கடவுள், அரசன், புரோகிதன், பதிவிரதை போன்ற உன்னதங்களின் வரிசையில் இலக்கியம் என்ற ஒன்றும் இடம்பிடித்துக்கொண்டது. இது இன்னொரு விக்கிரகம்போல வழிபடப்படுகிறது. அதிகாரபூர்வப் பண்பாட்டில் வகை வகையாகத் தரம் பிரிக்கப்பட்டு, ஒரு ஏறுவரிசையில் நிறுத்தப் பட்டு, ஒவ்வொரு வகைக்கும் ஓர் இலட்சிய உன்னதம் முன்மாதிரியாக நிறுத்தப்படுவதைப் போல, அதிகாரபூர்வத்தை எதிர்க்கிறவர்களின் பண்பாட்டில் வகைபாடுகளைக் காணவியலாது. இவர்களின் இயக்கத்தில் அரசியல், பண்பாடு, கலை இலக்கியம் முதலானவை தனித்தனியாக வகையுறாமல் கலவையாகவே இருக்கின்றன.

எனவே, அதிகாரபூர்வ இலக்கியத்தைக் கொண்டு கலக இலக்கியத்தை அளக்க முடியாது. அதிகாரபூர்வ இலக்கியத்தை நோக்கி வளர்வது கலக இலக்கியம் அல்ல; உன்னத - விக்கிரக - இலக்கியங்களை எள்ளி நகையாடி குப்புற வீழ்த்துவது ஒருபுறமும், அப்படிச் செய்வதன் மூலமாக உரிமையைப் பெறும் பொருட்டு, அங்கீகரிக்கப்படாதவர்களிடம் மறு படைப்பை யும் புத்தாக்கத்தையும் ஏற்படுத்துவது ஒருபுறமும் கலக இலக்கியங்களால் சாத்தியமாகின்றன. அத்துமீறுதலும் ஐக்கியப்படுதலும் ஒருசேர நிகழ்கின்றன. உன்னத இலக்கியமும் ஒடுக்கு முறையின் ஓர் அங்கம்தான். பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், சக்தி வழிபாடுபோல இது மிகுந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் சமத்காரங்களையும் புனித மதிப்பீடுகளையும் சாத்திரக் கட்டுப்பாடுகளையும் தணிக்கை முறைகளையும் கொண்டு மாபெரும் விக்கிரகமாக ஆக்கப்பட் டுள்ளது. இந்த விக்கிரகத்தை உடைப் பதிலிருந்தே பாதிக்கப்பட்ட தொகுதியினருக்கான கலக இலக்கியம் தொடங்குகிறது. திராவிட இயக்கத்தின் படைப்பாளிகள் குறிப்பிட்ட வரையறைகளோடுதான் உன்னத இலக்கிய விக்கிரகத்தை உடைத்துள்ளார்கள்.

திராவிடக் கலக இலக்கியம் வித்தியாச மானது. கதை, கட்டுரை, பிரச்சார வேகம், அத்துமீறல், அங்கீகரிக்கப்படாதவற்றின் ஊடுருவல், மொழி உடைப்பு, இலக்கண மீறல், குசும்பு, சேட்டை, கூச்சமின்மை, ஆசிரியக் குறுக்கீடு, அபத்த வருணிப்பு, எதார்த்தமின்மை, மிகை, நளினமற்ற முரட்டுப் பேச்சு ஆகியவற்றின் கலவையாக இது அமைகிறது.

**திராவிட இயக்கத்தின் உலகப் பார்வை**

ஒடுக்குகிற உன்னத இலக்கியத்தை, வேதத்தை, அதன்மூலம் பார்ப்பனியத்தைத் தூக்கிப் பிடிப்பவர்களே, திராவிட இயக்கம், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஊறுவிளைவித்து விட்டதாகக் கூக்குரலிடுவார்கள். அங்கீகரிக்கப் பட்டவற்றையும் அதிகாரபூர்வமானவற்றையும் எதிர்த்துப் பேச முடியும், அப்படிப் பேசுவது ஒன்றும் பாவம் அல்ல, அது குதூகலமானதுதான் என்கிற ஒருவிதப் பண்பாட்டுக் களிப்பை ஏற்படுத்தியவை திராவிட இலக்கியங்களே! அங்கீகரிக்கப்பட்டவர்களின் உன்னதங்களைக்

**கதாபாத்திரங்களுக்குப் பெயர் சூட்டு வதிலும் அண்ணா உன்னதங்களைத் தலைகீழாக்கியுள்ளார். புவனேஸ்வரி, கல்யாணி, தமயந்தி, திலகா, கோகிலம், ரமாமணி முதலிய வடமொழிப் பெயர்கள், வைதீகப் பெண் கடவுள் மற்றும் பதிவிரதையைக் குறிப்பன. புனிதம், தெய்வீகம், அழகு, மேன்மை போன்ற உன்னதங்களைக் குறிக்கும் இப்பெயர்களை அண்ணா, வேசைகளுக்கு இட்டுள்ளார்.**

கேலிசெய்வதன்மூலம் அவற்றைத் தலைகீழாகப் புரட்டிய திராவிட இலக்கியவாதிகள், இதன் நீட்சியாக மற்றொரு காரியத்தையும் செய்தார்கள். அங்கீகாரம் பெற்ற அதிகாரபூர்வப் பண்பாடு, எவற்றையெல்லாம் மரியாதை குறைவானவை, பாவமானவை, அருவருக்கத்தக்கவை என விலக்கி வைத்துள்ளதோ அவற்றையே, முன்வந்து ஏற்றுக் கலகப் பாங்கில் வாழ்வதன்மூலமாக, அதிகாரபூர்வப் பண்பாட்டை அதிரவைத்து, அதன் முகத்திரையைக் கிழிப்பது கலக இலக்கியத்தின் மற்றொரு பரிமாணம். ‘குமாஸ்தாவின் பெண்’ என்கிற கதை மூலம் அண்ணா இதைச் சாதித்துள்ளார்.

பார்ப்பன ஆதிக்கத்தை இறக்குவதைக் குறி இலக்காகக் கொண்ட திராவிட இயக்கத்தின் உலகப் பார்வை, இதன் இலக்கியத்தில் மிக வெளிப்படையாகவே மொழியப்பட்டுள்ளது. இந்தப் பார்வையில் நாத்திகத்தை உட்கொண்ட பகுத்தறிவு நோக்கும் கற்பனாவாத சோஷலிஸ நோக்கும் கலந்துள்ளன. அண்ணா, கொலம்பஸின் தனிமனித சாகசத்தைப் போற்றுவதிலும், பாரதிதாசன் ஜார் காலத்து ரஸ்புதீனைத் தூற்றுவதிலும் இந்த உலகப் பார்வையை இனங் காணலாம். பூர்ஷ்வாவின் தனிமனித சாகசம், சுதந்திரம், முன்னேற்றம், பொருள் சார்ந்த கருத்தியல் ஆகியவற்றுக்கு கொலம்பஸ் ஒரு பிரதிநிதிபோல காணப்படு கிறான். தமிழ்ச் சூழலில், இவன், தமிழர் - திராவிடர் - சூத்திரர் என்போரின் குறியீடுபோலப் படைக்கப்பட்டிருக்கிறான்.

கட்டுரையாளர் - சமூக அறிவியலாளர். தமிழ்த்திசை வெளியிட்ட அண்ணா - மாபெரும் தமிழ் கனவு நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரை

# வரலாற்றின்

| | |
|---|---|
| **1350 கோடி ஆண்டுகளுக்கு முன்பு** | பிரபஞ்சத்தில் பருப்பொருளும் ஆற்றலும் தோன்றுகின்றன. இயற்பியல் பிறக்கிறது. அணுக்களும் மூலக்கூறுகளும் தோன்றுகின்றன, வேதியியல் பிறக்கிறது. |
| **450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு** | பூமி உருவாகிறது. |
| **380 கோடி ஆண்டுகளுக்கு முன்பு** | உயிரினங்கள் தோன்றுகின்றன. உயிரியல் பிறக்கிறது. |
| **60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ பேரினத்திற்கும் சிம்பன்சிகளுக்கும் பொதுவான மூதாதையர் தோன்றுகின்றனர். |
| **25 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | ஆப்பிரிக்காவில் ஹோமோ பேரினம் தோன்றுகிறது. முதன்முதலாகக் கற்கருவிகள் உருவாக்கப்படுகின்றன. |
| **20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ பேரினம் ஆப்பிரிக்காவிலிருந்து யுரேசியாவிற்குப் பரவுகிறது. பல்வேறு மனித இனங்கள் உருவாகின்றனர். |
| **5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | நியாண்டர்தால் இனத்தினர் ஐரோப்பாவிலும் மத்தியக் கிழக்கிலும் தோன்றுகின்றனர். |
| **3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | நெருப்பின் அன்றாடப் பயன்பாடு நடைமுறைக்கு வருகிறது. |
| **2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ சேப்பியன்ஸ் இனம் கிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றுகிறது. |
| **70,000 ஆண்டுகளுக்கு முன்பு** | அறிவுப் புரட்சி மலர்கிறது. மொழி கண்டுபிடிக்கப்படுகிறது. வரலாறு உதயமாகிறது. ஹோமோ சேப்பியன்ஸ் ஆப்பிரிக்காவிற்கு வெளியே பரவுகின்றனர். |
| **45,000 ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ சேப்பியன்ஸ் ஆஸ்திரேலியாவில் குடியேறுகின்றனர். அங்குள்ள பூதாகரமான விலங்குகள் அழிகின்றன. |
| **30,000 ஆண்டுகளுக்கு முன்பு** | நியாண்டர்தால் இனத்தினர் பூண்டோடு அழிகின்றனர். |
| **16,000 ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ சேப்பியன்ஸ் அமெரிக்காவில் குடியேறுகின்றனர். அங்குள்ள பூதாகரமான விலங்குகள் அழிகின்றன. |
| **13,000 ஆண்டுகளுக்கு முன்பு** | ஹோமோ ஃப்புளோரெசியென்சிஸ் என்ற இன்னொரு மனித இனம் பூண்டோடு அழிகிறது, மனித இனங்களின் ஹோமோ சேப்பியன்ஸ் இனம் மட்டுமே எஞ்சி இருக்கிறது. |
| **12,000 ஆண்டுகளுக்கு முன்பு** | வேளாண் புரட்சி மலருகிறது. உணவுக்காகத் தாவரங்கள் பயிரிடப்படுகின்றன, விவங்குகள் பழக்கப்படுத்தப்பட்டு வீடுகளிலும் வயல்களிலும் தோட்டங்களிலும் வளர்க்கப்படு கின்றனர். நிரந்தரக் குடியேற்றம் தொடங்குகிறது. |

# வரலாறு

| | |
|---|---|
| **5,000 ஆண்டுகளுக்கு முன்பு** | முதல் மன்னராட்சி, பேச்சு மொழியின் எழுத்து, வடிவம், பணம் ஆகியனவே தோன்றுகின்றன, 'பல கடவுளர்' கோட்பாட்டை உள்ளடக்கிய மதங்கள் தலைதூக்குகின்றன. |
| **4,250 ஆண்டுகளுக்கு முன்பு** | வரலாற்றின் முதல் பேரரசரான சார்கானின் அக்கேடியப் பேரரசு உதயமாகிறது. |
| **2,500 ஆண்டுகளுக்கு முன்பு** | நாணயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. உலகளாவிய பணம் பிறப்பெடுக்கிறது. மனிதகுல நன்மைக்கான உலகளாவிய அரசிய லமைப்பு என்ற பிரகடனத்துடன் பாரசீகப் பேரரசு முளைக்கிறது. அனைத்து உயிர்களையும் துன்பத்திலிருந்து விடுவிக்கும் நோக்கத்துடன் இந்தியாவில் புத்தமதம் தோற்றுவிக்கப்படுகிறது. |
| **2,000 ஆண்டுகளுக்கு முன்பு** | சீனாவில் ஹான் பேரரசும், மத்தியத் தரைக்கடல் பகுதியில் ரோமானியப் பேரரசும் தோன்றுகின்றன. கிறித்தவ மதம் தோற்று விக்கப்படுகிறது. |
| **1,400 ஆண்டுகளுக்கு முன்பு** | இஸ்லாமிய மதம் தோற்றுவிக்கப்படுகிறது. |
| **500 ஆண்டுகளுக்கு முன்பு** | அறிவியல் புரட்சி மலருகிறது. மனிதகுலம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றத் தொடங்குகிறது. ஐரோப்பியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கின்றனர், பெருங் கடல்களை வெற்றி கொள்ளத் தொடங்குகின்றனர், ஒன்றிணைந்த வரலாற்றுக் களமாக உலகம் மாறுகிறது. முதலாளித்துவம் தலைத்தூக்குகிறது. |
| **200 ஆண்டுகளுக்கு முன்பு** | தொழிற்புரட்சி வெடிக்கிறது. குடும்பமும் சமூகமும் புறக்கணிக்கப் பட்டு, நாடும் சந்தையும் அவற்றின் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றன, தாவரங்களும் விலங்குகளும் பெரும் எண்ணிக்கையில் பூண்டோடு அழிகின்றன. |
| **தற்போது** | பூமி என்ற கோளின் எல்லயை மனிதர்கள் கடக்கின்றனர். அணு ஆயுதங்கள் மனிதகுலத்தின் இருத்தலை அச்சுறுத்துகின்றன. இயற்கைத் தேர்ந்தெடுப்புச் செயல்முறையால் அன்றி நுண்ணறிவுசார் வடிவமைப்பின் மூலம் உயிரினங்கள் உருவாவது அதிகரிக்கிறது. |
| **எதிர்காலத்தில்** | நுண்ணறிவுசார் வடிவமைப்பின் மூலம் உருவாக்கப்படும் படைப்புகள் வாழ்வின் அடிப்படைக் கோட்பாடாக மாறப் போகின்றன, ஹோமோ சேப்பியன்ஸின் இடத்தை அதிமனிதர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளப் போகின்றனர். |

**– யுவால் நோவா ஹராரி எழுதிய 'ஹோமோ சேப்பியன்ஸ்' நூலிலிருந்து**



# மூவலூர் இராமாமிர்தம்

## தேவதாசி இழிவுக்கு எதிராகக் களம் கண்ட போராளி

– க. திருநாவுக்கரசு

**1925இல் அன்றைய மாயவரத்தில் (இன்றைய மயிலாடுதுறை) முதல் தேவதாசி ஒழிப்பு மாநாட்டைக் கூட்டியவர் இராமாமிர்தம் அம்மையார். பெரியார் - திரு.வி.க. உள்ளிட்ட தலைவர்கள் அதில் பங்கேற்றனர்.**

இராமாமிர்தம் அம்மையாரின் பொதுத் தொண்டு காங்கிரஸ், நீதிக்கட்சி, சுமயரியாதை இயக்கம், திராவிடர் கழகம், தி.மு.கழகம் ஆகிய அமைப்புகளின் மூலம் நிகழ்ந்தன. காங்கிரசில் அம்மையார் இருந்த போதே 1925இல் மயிலாடு துறையில் இசை வேளாளர் மாநாட்டினைப் பொறுப்பேற்று நடத்தியிருக்கிறார்.

இம்மாநாட்டிற்குப் பிறகுதான் காங்கிரசின் ‘புகழ்’ பெற்ற காஞ்சிபுரம் மாநாடு நடைபெறு கிறது. இவ்வம்மையாரின் செயற்பாடுகளைக் கவனிக்கிறபோது, தேவதாசி ஒழிப்புச் சட்டத்திற்கு டாக்டர் முத்துலட்சமி ரெட்டிக்கு இவர்தான் முன்மாதிரியாகத் தோன்றி இருக்கிறார். அவரது மயிலாடுதுறை மாநாடுதான் அதற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. காங்கிரஸ் காலத்திலேயே இவ்வம்மையார் தந்தை பெரியார் பக்கம் நின்று பணியாற்றுவதில்தான் பெருவிருப்பம் கொண்டவராக இருந்திருக்கிறார். 1925இல் வகுப்புவாரித் தீர்மானம் காஞ்சிபுரம் மாநாட்டில் தோற்றுப் போகவே பெரியாரோடு வெளியேறிய முக்கியமானவர்களில் இராமாமிர்தம் அம்மையாரும் ஒருவர்.

மயிலாடுதுறையில் கூட்டிய இசை வேளாளர் மாநாடு, ஒரு திருப்பத்தை உண்டு பண்ணியிருந்தது. இம்மாநாடு குறித்து திரு.வி.க. விவரிப்பதைப் பார்ப்போம்.

“மாயவரத்திலே நாகபாசத்தார் சங்கம் என்றொன்று காணப்பட்டது. அது பின்னே இசை வேளாளர் சங்கம் என மாற்றப்பட்டது. இச் சங்கத் திற்குத் தூண் போன்றவராயிருந்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். அவ்வம்மையாரை யான் முதன்முதலில் நவசக்தி நேயராகவே கண்டேன். நாளடைவில் அவர் நவசக்திப் பித்தரும் ஆனார். (‘நவசக்தி’ - திரு.வி.க.வை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த நாளேடு)

இராமாமிர்தம் முன்னணி வேலை செய்வதில் வல்லவர். திறமை வாய்ந்தவர். அவர் எங்கே சென்றாலும் வழுக்கி விழுந்த சகோதரிமார் கூட்டம் அவரைச் சூழும். அச்சூழல் வாயிலாகக் குறைகள் வெளியாகும்; குறைகள் அம்மையாரால் தீர்க்கப்படும். பெண்ணுலகில் நேர்ந்த வழுக்கலைப் போக்க வந்த கற்பகம் இராமாமிர்தம் என்றே யான் நினைக்கிறேன். அக்கற்பகம் மாயவரத்தில் (1925) ஒரு மாநாடு கூட்ட முயன்றது.

இசை வேளாளர் மாநாடு கூட்டுதல் எளிதன்று. அதன் அருமைப்பாட்டை யான் நன்குணர்ந்தவன். இராமாமிர்தத்தின் முயற்சி அருமையை எளிமையாக்கிற்று. மயூரமணி சின்னையா பிள்ளை, எஸ். இராமநாதன் முதலியோர் முயற்சிக்குத் துணை நின்றனர்.

முதலில் எனதுதலைமை விரும்பப்பட்ட தென்று தெரிய வந்தது. "இசை வேளாளருள் ஒருவர் தலைமை பூண்பதே சிறப்பு. மகாநாட்டை உடனிருந்து யான் நடத்துவேன். நவசக்தியில் முழு ஆதரவு தருவேன்" என்று மொழிந்து விடுத்தேன். வழுக்கி விழுந்தவர் முன்னேற்றத்திற்கென்று 'யுவதி சரணாலயம்' என்று பள்ளி அமைத்தது. அதை நன்முறையில் நடத்தி வந்த யமுனா பூரண திலகம்மா என்னும் ஓர் ஆந்திர அம்மையார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரையும் தண்டபாணி பிள்ளையையும் எழும்பூரில் சந்தித்தேன். எல்லோரும் மாயவரம் சேர்ந்தோம். இராமசாமி நாயக்கரும் எங்களுடன் கலந்தனர். எங்களை வரவேற்க இசை வேளாளர் குழு திரண்டிருந்தது. அவர் முகங்களில் நிலவு பொழிந்தது. இராமாமிர்தத்துக்கு ஆனந்தம். நம்முடைய எண்ணம் ஈடேறிற்று. தமிழ்நாட்டிற்கு 'நல்ல காலம் பிறந்தது' என்று இறுமாப்பு அடைந்தேன். எல்லோரும் "கூறை நாட்டு"க்குப் (அன்றைய மாயவரம் இன்றைய மயிலாடு துறையில் ஒரு பகுதி) போந்தோம். மகாநாடு காலையில் முறைப்படி நடந்தது. பிற்பகல் மகாநாடு பேச்சுக்கென்று கூடியது. யான் முதலில் பேசினேன். நீண்டகாலம் என்னுள் அடங்கிக் கிடந்த ஆர்வம் பொங்கியது. எண்ணிய எண்ணங் களெல்லாம் மிடைந்து 'குமுறிக் குமுறி' வெளி வந்தன" என்று கூறிச் செல்லும் திரு.வி.க. பெரியாரின் இயக்கத்திற்கு மூளையாக விளங்கிய எஸ். இராமநாதனும், நுரையீரலாக மயூரமணி சின்னையாபிள்ளையும் விளங்கி இராமாமிர்தம் அம்மையாரை ஈர்த்தனர் என்று குறிப்பிட் டுள்ளார்.

காங்கிரசின் மீது அம்மையாருக்கு முழு நம்பிக்கை ஏற்படாமல் போனதன் விளைவாகத் தான் நீதிக் கட்சியையும், பெரியார் இயக்கத்தையும் ஆதரிக்கத் தொடங்கினார். அவர் ஆதரவு வீண் போகவில்லை. தேவதாசி ஒழிப்பைச் சட்ட மாக்கிய பெருமை நீதிக்கட்சிக்கே உண்டு. இது வரலாறு காட்டும் உண்மையாகும்.

இராமாமிர்தம் அம்மையார் திருவாரூரைச் சேர்ந்த கிருஷ்ணசாமி - சின்னம்மாள் இணை யினருக்கு 1883ஆம் ஆண்டில் பிறந்தார்.

அம்மையார் வளர்ந்து சமூகச் சீரழிவைத் தெரிந்து தெளிந்து காங்கிரசில் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கி, அதன் போக்கு அவருக்கு ஒத்துவராமல் நீதிக்கட்சியிற் சேர்ந்தது முதல் பொதுப் பணியை மீண்டும் தொடங்கித், தி.மு.கழகம் வரை தொடர்ந்து செயலாற்றி வரலானார்.

சுயமரியாதை இயக்க நாள்களில் - திருமண இல்லங்களில் அம்மையாரின் பேச்சு ஆழ்ந்த ஆராய்ச்சிப் பேச்சாக விளங்கி இருக்கிறது. இவர் தமிழும், வடமொழியும் கற்றவர். அதனால் திருமண விழாக்களில் சமற்கிருத மந்திரங்களை எல்லாம் அப்படியே உச்சரித்து அவற்றின் பொருளை எல்லாம் விளக்கிப் பேசித் தமிழ் மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தினார். இவர் இப்படிப் பேசியதின் விளைவாகச் சுயமரியாதைத் திருமணங்கள் எண்ணற்றவை நடைபெறலாயின. அம்மையார் அவர்கள் கைம்பெண்களுக்குத் திருமணங்களையும் நடத்தி வைத்திருக்கிறார்கள்.

பெரியார் ரஷியச் சுற்றுப் பயணம் முடிந்து 1933இல் சுயமரியாதை இயக்க வேலைத் திட்டம், இலட்சியம் ஆகியவற்றை வகுத்த கூட்டத்தில் அம்மையார் கலந்து கொண்டு பணியாற்றி யிருக்கிறார்.

1938ஆம் ஆண்டு முதல் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்றது. இவ்வெதிர்ப்புப் போரில் கலந்து கொண்டு அம்மையார் சிறப்புறப் பணியாற்றினார். திருச்சியிலிருந்து சென்னையை நோக்கிக் கிளம்பிய இந்தி எதிர்ப்பு நடைப் பட்டாளத்திற்குத் தலைமைதாங்கி நடத்திச் சென்றவர்களில் அம்மையாரும் ஒருவர். இப் படையுடன் சென்னையை அடைந்த பிறகு டாக்டர் எஸ்.தருமாம்பாள், நீலாம்பிகை அம்மையார், மலர்முகத்தம்மையார், தாமரைக் கண்ணியம்மையார் போன்ற வீராங்கனை களுடன் இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டு வேலூர்ச் சிறையில் இருந்தார்.

1949ஆம் ஆண்டு தி.மு.க. தொடங்கப் பட்டவுடன் அதன் முன்னணித் தலைவர்களில் ஒருவராக அம்மையார் விளங்கினார். தி.மு.கழகத்தின் 2ஆம் மாநில மாநாட்டில் அறிஞர்

அண்ணா அவர்கள் அம்மையாருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார். தி.மு.கழகத்தில் முதன்முதலாகக் கேடயம் (விருது) பெற்றவர் மூவலூர் மூதாட்டியார்தான்!

இவரது பொதுப் பணிக்கு இன்றும் ஒரு சிறந்த சான்றாக விளங்கி வருவது இவர் எழுதிய 'தாசிகள் மோசவலை' அல்லது 'மதி பெற்ற மைனர்' என்கிற நாவலாகும். 1936ஆம் ஆண்டு இதனை வெளியிட்டார். இது மக்களின் வரவேற்பைப் பெற்றது. இதுவன்றி 'தமயந்தி' எனும் சிறுகதையையும் இவர் எழுதினார்.

இந்நூலுக்குச் சிவகிரி ஜமீன் செ. வெள்ளைத்துரைச்சி நாச்சியார் முன்னுரை வழங்கியுள்ளார். இந்நூல் வெளி வரவும் அவரே உதவியுள்ளார். அவர் வழங்கிய முன்னுரையி லிருந்தும் நமக்குச் சில தகவல்கள் கிடைக்கின்றன. அம்முன்னுரையில் அவர், "இந்நாவல் தேவதாசி முறையையே அடியோடு ஒழிக்க எழுந்தது என்பது மிகையாகாது. சமூக முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வரும் இவ்வம்மையாரது மன உணர்ச்சியின் பிரதிபிம்பம் இந்நாவல். எனவே, இதில் காணப்படும் கதை அமைப்பும், சம்பாஷணைகளும், வாதப் பிரதிவாதங்களும், சொற்பொழிவுகளும், தாசிகள் மோசவலையில் வாலிபர்கள் சிக்கி அழியாதவாறு தடை செய்ய வல்லன என்பது எனது உறுதியான அபிப்பிராயம். இதைப் படித்தால் பரம்பரை தாசிகளும் தங்கள் இழிநிலையை உணர்ந்து திருந்துவார்கள் என்று நம்புகிறேன். ஸ்ரீமதி இராமாமிர்தம் அம்மையார் இதைப் போல் இன்னும் அநேக நாவல்களை வெளியிட்டுத் தமிழ்ச் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்று எழுதியுள்ளார்.

இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், "மூவலூர் திரு. இராமாமிர்த்தம்மாள் எழுதி வெளியிட்ட 'மதி பெற்ற மைனர்' என்னும் நவீனத்தைப் படித்துப் பார்த்தேன்.

தமிழ்நாட்டில் இளைஞர்கள் ஒழுக்கத்தை யோம்பி நாட்டுத் தொண்டில் ஈடுபட்டு முன்னேற வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது என்பது அதைப் படிப்பவர்க்கு எளிதில் விளங்கும்.

**யாரையாவது வைய வேண்டுமானால், 'தேவடியாள் மகனே' என்கிறார்களே - அது ஒன்றே தேவதாஸி - தேவடியாள் - கலைப் பெண்டு - விலைமகள் - பரத்தை முதலிய பெயர்கள் தாங்கிய ஒரு வியபிச்சாரப் பெண் சமூகம், இந்நாட்டில் தொன்றுதொட்டே இருந்து வருகிறது என்பதைக் காட்டுகிறது.**

இடையிடையே நீண்ட சுயமரியாதை உபந்யாசம் பெருகினும், அவையனைத்தும் தமிழ்ச் சமுதாய நலன் கருதியே வருதலால் அவை வெறுக்கத்தக்கனவும் அல்ல" என்று எழுதி யுள்ளார்.

இந்நூலுக்குப் புகழுரை வழங்கிய திருமதி குஞ்சிதம் குருசாமி, அம்மையாரைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.

"இந்தக் கட்டை விழுவதற்குள் மனித சமூகத்திற்கு நம்மாலான சிறு உதவியைச் செய்துவிட்டுப் போவோம் என்ற ஒரு சிறந்த எண்ணத்தில் பொதுஜன ஊழியம் செய்பவர் களில் மூவலூர் தோழர் இராமமிர்தம்மாள் அவர்களும் ஒருவராவார்.

தமிழ்நாட்டில், முதன்முதல் பொது மேடையேறிச் சொற்பொழிவாற்றிய மங்கையர் ஒரு சிலருள் இவர் முக்கியமானவர் என்று சொல்லலாம்.

அம்மையாரின் பேச்சுத் திறனை அனுபவித்த மக்கள் இப்போது அவர்களது எழுத்துத் திறனையும் அறிய ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்கள்.

இந்நூலில் சோதிடம், மந்திரம், குறி சொல்லுதல் முதலிய குருட்டு நம்பிக்கைகளைப் பற்றியும் கடவுள், மோட்சம் இவைகளின் பெயரால் காலத்தையும் காசையும் விரயமாக்கும் அறிவீனத்தைப் பற்றியும், ஆசிரியர் விவாத ரூபமாக விளக்கி இருக்கிறார். இவற்றில் கருத்து வேறுபாடு உடையவர்களுடைய சிந்தனைச்

சக்தியைக்கூடக் குத்திக் கிளறும் முறையில், சில கருத்துகள் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடக் கூடியதாகும்.

பெண்களைக் கடவுளுக்குப் பொட்டுக் கட்டுதல், விபச்சாரம் முதலிய அநாகரிக முறைகளை ஒழிப்பதற்காக அல்லும், பகலும் உழைத்துவரும் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களுடைய அரும் பணிக்குத் தோழர் இராமாமிர்தத்தம்மாள் அவர்களின் இந்நூல் பெருந்துணையாகும் என்பது என் நம்பிக்கை.''

இப்புத்தகத்தின் பதிப்புரையை மூவலூர் மூதாட்டியார் எழுதியுள்ளார். இப்பதிப்புரை அவரது ஆராய்ச்சி அறிவினையும் ஆழத்தையும் தொண்டுள்ளத்தையும் குறிப்பதாக உள்ளது.

அப்பதிப்புரையை அப்படியே இங்கே தருகிறோம். இதிலிருந்து அம்மையாரின் அறிவு நுட்பத்தை அறிந்து கொள்ளலாம். பதிப்புரை வருமாறு:

''தேவதாஸி - தேவடியாள் (தேவ அடியாள்) ஆஹா! என்ன திவ்வியமான திருப்பெயர்கள்! தெய்வத்திற்குப் பக்தி சிரத்தையுடன் திருத் தொண்டு புரிபவளே தேவதாஸி - தேவடியாள். இந்தப் பெயர்கள் காதில் பட்ட மாத்திரத்தில், இக்காலத்தில் நாம் என்ன நினைக்கிறோம். குடிகெடுக்கும் வியபிச்சாரி என்ற நினைவைத் தவிரத் தெய்வத் திருத்தொண்டு புரியும் பக்த சிரோமணி என்ற நினைவு கனவிலும் வருவதில்லை.

தேவதாஸிகள் கோவில்களில் வசித்து, உலகியல் விவகாரங்களில் ஈடுபடாமல் - அகப்பற்றுப் புறப்பற்றுகளைத் துறந்து, தியாகமும் சீலமும் உடையவர்களாய் - சதா சர்வகாலமும் பகவத் கைங்கரியங்களையே மேற்கொண்டு - சத்காலக்ஷேபம் செய்யும் தவமணிகள் என்று வேதாகமங்கள் முழங்குவதாகச் சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இந்தக் காலத்தை விட்டுத் தள்ளுங்கள். எந்தக் காலத்திலாவது இப் 'புண்ணிய' பூமியில் தேவதாஸிகள் என்பவர்கள் மேற்சொன்ன இலக்கணத்திற்கு இலக்கியமாய் இருந்திருக்கிறார்களா என்னும் உண்மையை அந்தச் சாஸ்திரிகளும் பண்டிதர்களுமே நிருபணம் செய்து ருஜூ கொடுக்க வேண்டும். எனது சிற்றறிவுக்குக் கடுகளவுகூட அந்தச் சங்கதி புலப்படவில்லை. இந்தக் காலத்தில் தேவதாஸிகளின் மகிமையைத் தெரிந்து கொள்ளச் சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. யாரையாவது வைய வேண்டுமானால், 'தேவடியாள் மகனே' என்கிறார்களே - அது ஒன்றே தேவதாஸி - தேவடியாள் - கலைப் பெண்டு - விலைமகள் - பரத்தை முதலிய பெயர்கள் தாங்கிய ஒரு வியபிச்சாரப் பெண் சமூகம், இந்நாட்டில் தொன்றுதொட்டே இருந்து வருகிறது என்பதைக் காட்டுகிறது. 'தேவதாஸி வேறு' - மற்ற விலைமகளும் - பரத்தையும் வேறு என்று வாதிக்கின்றவர்களும் இங்கே இருக்கிறார்கள். ஆனால், பண்டைக்காலந்தொட்டே கோயில் குருக்கள்மாரும், அரசர்களும், செல்வர்களும், மற்றவர்களும் தெய்வத்தின் பெயரால், கலையின் பெயரால், யோகத்தின் பெயரால் குறிப்பிட்ட ஒரு பெண் சமூகத்தை வியபிச்சாரத்திற்கு உபயோகிக்க ஆக்கம் அளித்து வந்தார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது என்பது எனது கெட்டியான அபிப்பிராயம். எனவே, அந்த வியபிச்சாரக் கூட்டத்தில் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்துக் கொண்டு வாதித்துப் பெருமை பேசிக் கொண்டிருப்பது வீண் வேலையாகும்.

தேவதாஸி முறையை ஒழிக்க வேண்டும். தெய்வமகளின் பெயரால் பொட்டுக் கட்டும் அநாகரிக வழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்று டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் போன்ற சீர்திருத்தவாதிகள் சொன்னால், இப்பொழுதும் முட்டுக்கட்டை போடு கின்றவர்கள் யார் என்பதைக் கவனியுங்கள். வைதீகக் கூச்சல் ஒருபுறமிருக்கட்டும் - பெரிய, பெரிய சட்ட நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், சமூகச் சீர்திருத்தத் தலைவர்கள் என்பவர்களே குறுக்கே விழுகிறார்கள். கும்பகோண சாஸ்திரிகளைக் காட்டிலும் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் ''தேவதாஸிகள் இருக்க வேண்டும். தேவதாஸி முறையை ஒழிப்பது தெய்வ விரோதம் - சட்ட விரோதம்'' என்று கூச்சல் போட்டுப் பிரச்சாரம் செய்யத் தொடங்குகின்றார்கள். கிருஷ்ணய்யர்களோ ''தேவதாஸி முறையை ஒழிப்பது நமது புராதன நாட்டியக் கலை, இசைக் கலை பொக்கிஷங்களை ஒழிப்பதாகும்'' என்று கூச்சல் கிளப்புகிறார்கள்.

சாஸ்திரிகளோ ''தேவதாஸி முறையை ஒழித்தால் சாஸ்திரம் போச்சு - நாத்திகம் ஆச்சு'' என்ற தலைகளில் அடித்துக் கொள்கிறார்கள்.

இனி ‘தாஸிகள்’ வீடுகளே மோட்சம் என்று கருதிக் கொண்டிருக்கும் ஜமீன்தார்கள் - பிரபுக்கள் முதலியவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

தேவதாஸி முறையை ஒழிப்பதற்கு எதிரிடையாகத் தங்களுடைய அதிகாரமும் - செல்வமும் எவ்வளவு தூரம் பாயுமோ அவ்வளவு தூரம் உபயோகிக்கத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

“நமது நாட்டில் பெண்கள் தெய்வமாகப் போற்றப்படுகிறார்கள்” என்பது ஏமாற்றுப் பேச்சு. இந்நாட்டுப் பெண்கள் எல்லாத் துறையிலும் அமுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குத் தெய்வங்களின் பெயராலும், சாஸ்திரங்களின் பெயராலும், ஒரு பெண் சமூகத்தை வியபிச்சாரத்திற்குத் தயாராக்கிக் கொலை பாதகம் செய்திருப்பதொன்றே போதிய சான்றாகும். 15 ஆண்டுகளுக்கு முன் தேவதாஸிகள் பிரச்சினை காந்தியடிகள் கவனத்தையும் ஈர்த்தது. பாரிஸால் என்னும் ஊரில் தேவதாஸிகளின் இழந்த வாழ்க்கையை அவர் நேரில் கண்ணுற்று வருந்தினார். “தேவதாஸி முறையையே அடியோடு அழித்து ஒழித்திட வேண்டும்” என்று எண்ணினார்.

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் காந்தியடிகள் சகாக்களாய் விளங்கிய தோழர்கள் சி.இராஜகோபாலாச்சாரியார், ஈ.வெ. ராமசாமியார், திரு.வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்ற பிரமுகர்கள், தேவதாஸி முறையை ஒழிப்பதில் ஒருவாறு அனுதாபம் காட்டினர். இந்தச் சமூகத்தில் பிறந்த படாதபாடெல்லாம்பட்டுத் தேர்ந்த எனக்கு, எவ்வழியிலேனும் இவ்வியபிச்சாரக் கூட்டத்தைத் தலையெடுக்க விடாமல் ஒழித்து விட வேண்டும் என்று கலைப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு, அந்தச் சந்தர்ப்பம் பெருந்துணையாக வந்து வாய்த்தது. ஆங்காங்கும் பொட்டறுப்புச் சங்கங்கள் கண்டு பிரச்சாரம் செய்யத் தொடங்கினேன்.

தேவதாஸி சமூகத்திலேயே பலமான எதிர்ப்பு கிளம்பியதோடு, நான் மேலே குறிப்பிட்ட பெரிய தலைவர்கள் - சாஸ்திரிகள் - ஜமீன்தார்கள் - பிரபுக்கள் - மாமாக்களின் எதிர்ப்புகளும் விரோதங்களும் வெளிப்படையாகவும் மறை முகமாகவும் கிளம்பத் தலைப்பட்டன. எனக்கும் என்னுடைய தோழர்களுக்கும் மிகுந்த மனச் சோர்வும் மலைப்பும் ஏற்பட்டன.

பிரிட்டானியத்தையும், பார்ப்பனியத்தை யும்கூட எளிதில் எதிர்க்கலாம் - இந்த தேவதாஸி முறையை எதிர்ப்பது சாமானிய முறை அன்று என்ற முடிவுக்கு வந்தோம்.

எனது சொந்த சமூகத்திலேயே ஏற்பட்ட பலமான எதிர்ப்புகளுக்கிடையே, யாரையும் இலட்சியம் செய்யாது எங்கள் சீர்திருத்த முயற்சிகளுக்கு மேன்மேலும் உற்சாகமூட்டி உதவி புரிந்த தோழர்களான திருவாவடுதுறை நாதசுரம் டி.என். ராஜரத்தினம் பிள்ளை, சீர்காழி சுப்பையா பிள்ளை போன்ற தன்மதிப்புணர்ச்சி மிக்க அன்பர்களை நான் என்றும் மறவேன்.”

இராமாமிர்தம்மையாரின் உள்ளக் கிடக்கையை இப்பதிப்புரை எடுத்து இயம்புகிறது. வாழ்வெல்லாம் உயர்ந்த ஒரு நோக்கத்திற்காக அர்ப்பணித்த அம்மையார் 27.6.1962இல் இயற்கை எய்தினார். நமது இயக்க இதழ்கள் அம்மையாரின் தொண்டுகளின் சிறப்பைப் பற்றியெல்லாம் செய்திகள் வெளியிட்டன.

இவ்வம்மையாரின் பெயரில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக (1989-91) மூன்றாவது முறையாக இருந்தபோது ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தினை அறிவித்து நடைமுறைப் படுத்தினார். எட்டாவது வரை படித்த திருமணமாகாத பெண்களுக்கு ரூ.5,000/- அவரின் சார்பாக திருமண உதவித் தொகையாக வழங்கப் பட்டது. இத்திட்டத்திற்கு ‘இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்’ எனப் பெயர் சூட்டி அவரின் தொண்டு பாராட்டப்பட்டது.

**கட்டுரையாளர் - திராவிட இயக்க ஆய்வாளர்**
**அவர் தொகுத்த ‘திராவிட இயக்க வேர்கள்’ நூலில்**
**இடம் பெற்ற கட்டுரை.**


# “புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

# ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049




# பெரியார் மண்ணா? ஆழ்வார்கள் மண்ணா?

– பழனி சோ. முத்து மாணிக்கம்

**'தமிழ்நாடு பெரியார் மண்' என்ற குரல் ஒலிக்கும் போதெல்லாம் - 'இல்லை; இது ஆழ்வார்கள், நாயன்மார்கள் பூமி' என்று எதிர்க்குரல், இந்து முன்னணிகளிடமிருந்து கேட்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் மனிதகுல விடுதலைக்கு என்ன செய்தார்கள்? என்ற கேள்வியை எழுப்புகிறது, கட்டுரை.**

தொலைக்காட்சி ஒன்றில் அனல் தெறிக்க அறிஞர்களின் விவாதம் அரங்கேறிக் கொண்டிருந்தது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் பற்றிப் பேசும்போது ஒருவர், 'இது பெரியார் மண்; எனவே மதவாதக் கட்சிகளுக்கு இடமில்லை என்று மக்கள் தீர்ப்பளித்துள்ளார்கள்' என்றார். உடனே மதவாத கட்சியை ஆதரிக்கும் நண்பர் வெகுண்டெழுந்தார். 'இது பெரியார் மண் அல்ல; இது ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டாளும் தோன்றிய மண்' என்று உரக்கக் குரல் கொடுத்தார். இருவர் சொல்வதிலும் உண்மை இருக்கிறதே எனத் தோன்றுகிறது அல்லவா? எப்பொருள் எத்தன்மை உடையதாக இருந்தாலும், யார்யார்வாய்க் கேட்பினும், ஆய்ந்து முடிவெடுப்பதே சிறந்தது.

இது பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சமனியம் பேசிய திருவள்ளுவர் தோன்றிய மண்; காதலையும் வீரத்தையும் கொண்டாடிய தமிழினத்தின் பண்பு நலன்களையும் நாகரீகத்தையும் பாட்டோவியங்களாக்கிக் கொடுத்த சங்கப் புலவர்கள் வாழ்ந்த மண்; பக்தி யுகத்தில் தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டத் தமிழால் தத்தமது தெய்வங்களைப் பாடினார்கள்.

'நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்' என்று பாடிய திருநாவுக்கரசரை மறக்கமுடியுமா? பிறவாதிருக்க வேண்டும்; அன்றிப் பிறந்தால் உன்னடி மறவாதிருக்க வேண்டும்; வீடுபேறு வேண்டும் என்றெல்லாம் கடவுளிடம் மனுப் போட்டவர்களைப் பார்க்க முடிகிறது. கடவுளுக்கு வான்முட்டும் கோபுரங்களுடன் கோயில்கள் கட்டிய மன்னர்களும் இதே மண்ணில் வாழ்ந்ததை அறியமுடிகிறது.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடியவர்கள் வாழ்ந்த காலத்தில், தம் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு வரியாகச் செலுத்தி விட்டு, வறுமையின் பிடியில் வாடிய மக்களைப் பற்றி எவரேனும் பாடியதுண்டா? பல்லக்குத் தூக்கச் சிலர்; அதன்மேல் உட்கார்ந்து வருவதோ சாதி வேறுபாடுகள் பாராட்டும் மேட்டுக்குடி மக்கள். இந்தச் சமூக அவலங்களைச் சாடி ஆழ்வார்கள் நாயன்மார்கள் எங்கேனும் பாடி இருக்கிறார்களா? சித்தர்களின் கலகக் குரல் எழும்வரை எவரும் எளிய மக்களின்

துயரங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பிற மதங்களின் வெறுப்பை உமிழும் பாடல்களைத்தான் காண முடிகிறது. சமண மதத்தையும் சாக்கிய மதத்தையும் அழித்துச் சைவத்தை வளர்க்க முயன்ற கதையைப் பெருமையாகப் பாடி வைத்தார்கள். சமணர்களும் சாக்கியர்களும் பாவங்களையே செய்வார்கள்; நெறியில்லாத சொற்களைக் கூறுவர்; அதை நீவிர் பொருட்ப டுத்தக்கூடாது என்கிறார் திருஞான சம்பந்தர் தன் பாடலில் இப்படி: "அறிவிலாத வன்சமணர்கள் சாக்கியர் தவம்புரிந்து அவம் செய்வார். நெறியிலாதன கூறுவர்; மற்று அவை தேறன்மின்".

சாதி வேற்றுமைகளைப் பற்றி ஆழ்வார் களும் நாயன்மார்களும் ஏதேனும் கவலைப்பட் டிருந்தார்களா? சித்தர்களின் கலகக் குரல் கேட்கும் வரை பக்தி இலக்கியங்களில் பாமரனைப் பற்றிய குறிப்பே இல்லை. "சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே?" என்று கேள்வி கேட்கிறார் சிவவாக்கியர். "சாதிபேதமில்லை அகப்பேய், தானாகி நின்றவர்க்கே" எனக் கூறுகிறார் அகப்பேய்ச் சித்தர்.

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்; வீடுதோறும் இரந்து வாழும் வெற்றரைக் கண்டு நொந்து அதற்கு வழிகாண வேண்டும்; எல்லாச் சமய ஆறுகளும் சென்று இறைவன் என்ற ஒரே கடலில்தான் கலக்கின்றன. எனவே மத வேறுபாடுகள் வேண்டாம்; கருணையிலா ஆட்சி கடுகி ஒழியவேண்டும் என்று மானுடத்தைப் பற்றிச் சிந்திக்க ஒருவர் வந்தார். அவர்தான் வள்ளலார்.

அடுத்த காலகட்டத்தில் அயோத்திதாசர், அய்யாவைகுண்டர் போன்றோர் மக்களைப் பற்றிக் கவலைப்பட்டார்கள். சாதி என்னும் சதிவலையில் சிக்கிய சமூகத்தைச் சமன்படுத்த உழைத்தார்கள். சாதி ஆதிக்கத்தைச் சாடவந்த அயோத்திதாசர், "நூறுகுடிகளைக் கெடுத்துத் தங்கள் ஒருகுடி சுகமடையக் கோரும் சாதித் தலைவர்களின் கொடிய செயல்களை அடக்க அறக்கருணையாம் செங்கோல் உதவாது. மறக் கருணையாம் கொடுங்கோல் கிஞ்சித்து இருந்தே தீரல் வேண்டும்" என வெகுண்டு எழுகிறார். (நன்றி - இராஜ் கவுதமன் நூல்: க. அயோத்திதாசர் ஆய்வுகள்).

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடியவர்கள் வாழ்ந்த காலத்தில், தம் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு வரியாகச் செலுத்தி விட்டு, வறுமையின் பிடியில் வாடிய மக்களைப் பற்றி எவரேனும் பாடியதுண்டா?**

சாதி அழிந்தால் மதம் அழிந்துவிடும் என்று கவலைப்பட்டார்கள் இந்து மதவாதிகள். "சாதி அடையாளங்கள் வரையறைகள் மூலமே பரதகண்டத்தில் இந்துமதம் பேணிக் காக்கப்பட்டு வந்துள்ளது. சாதியே இதற்கு ஆதாரம். சாதியை விட்டால் இந்துமதம் அழிந்துவிடும்" என்கிறது 'இந்து தர்ம தத்துவம்' என்ற நூல். எனவே மனிதனை மனிதன் தாழ்த்தும் பழக்கம் மானுடத்துக்கே கேடு என்பதை உணர்ந்து அதை ஒழிக்க ஈரோட்டிலிருந்து புறப்பட்டது ஒரு சூரியன். அதன் பெயர்தான் பெரியார் .

செல்வவளம் மிக்க குடும்பத்தில் பிறந்தார்; தான் வகித்த கவுரவ நீதிபதி, திருக்கோயில் குழுத் தலைவர் முதலான 29 பதவிகளைத் துறந்து, சமனியத்தை இவ்வுலகில் சமைக்கவென்றே தன் வாழ்நாளில் போராடிப் போராடி மறைந்தவர் பெரியார். அவர் ஓர் இறை மறுப்பாளர் என்று மட்டுமே மதவாதிகள் கருதுகின்றார்கள். அவருடைய பன்முக ஆளுமை நம்மை வியக்க வைக்கின்றது.

பெரியாரின் சிந்தனைகளை நாட்டளவில் கொண்டு செல்ல வேண்டும். தேசியம் பற்றிப் பெரியார் பாலக்காட்டில் நிகழ்த்திய உரையில் அவருடைய தொலைநோக்குப் பார்வை புலப்படுகிறது.

"........ஒரு தேசத்தின் தேசியம் முக்கியமாக எதைப் பொறுத்திருக்க வேண்டுமென்று பார்ப்போமானால், குறைந்தபட்சம் ஒரு தேச மக்கள் தங்கள் மனத்தையும், மனச்சாட்சியையும் விற்காமலும் விட்டுக் கொடுக்காமலும் வயிறு வளர்க்கும்படியாவது இருக்கவேண்டும். ஈதன்றி, அதற்கு மேற்பட்ட தேசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறிவு வளர்ச்சி வேண்டும். கல்வி வேண்டும். ஆராய்ச்சி வேண்டும். கண்ணியமான தொழில் வேண்டும். சமத்துவம் வேண்டும்.



ஒற்றுமை வேண்டும். தன் முயற்சி வேண்டும். உண்மை உயர்வு வேண்டும். ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும். சோம்பேறிகள் இருக்கக் கூடாது. அடிமைகள் இருக்கக் கூடாது. தீண்டாதவர்கள் நடக்க முடியாதவர்கள் இருக்கக் கூடாது. இனியும் இது போன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்.'' (நன்றி. விஜயன்..நூல்: பெரியாரும் சுயமரியாதை இயக்கமும் ).

'நான் கூறும் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள். உங்கள் மனதுக்குச் சரியென்று பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறுவார் பெரியார். தன் சொற்பொழிவின் போது முட்டை வீச்சுகளையும் கல்லெறிகளையும் செருப்பு வீச்சுகளையும் புன்னகையோடு எதிர்கொண்டவர் பெரியார். கருத்துரிமைக்குக் காவலனாகத் திகழ்ந்தவர் பெரியார். மாற்றுக் கருத்துடைய திரு.வி.க., இராஜாஜி போன்றோரின் நண்பர்களாகத் திகழ்ந்தவர். பெரும் இலக்கிய அறிஞர்கள் செய்திருக்க வேண்டிய எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழுக்குக் கொண்டுவந்த பேரறிஞர் அல்லவா பெரியார்! அவர் பங்கேற்ற சில மேடைகளில் கடவுள் வாழ்த்து இசைக்கப்பட்ட போது, மேடை நாகரிகம் கருதி எழுந்து நின்றவர் அவர். 94 ஆண்டுகள் வாழ்ந்தவர்; 10700 நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர். காந்தி மதுவிலக்குப் போராட்டத்தை அறிவித்தபோது, அடுத்த கணமே தன் தோப்பிலிருந்த 500 தென்னைகளை வெட்டியவர். உடல்நலம் குன்றியபோதும், தன் மூத்திரப் பையைச் சுமந்துகொண்டே இந்த மண்ணும் மக்களும் பயன்பெற வேண்டும் என்று சூறாவளிபோல் சுழன்று, மக்களுக்காகத் தன்னை ஒப்புக் கொடுத்த தலைவனை உலகில் வேறெங்கும் கண்டிருக்கிறோமா?

சொல்லிய வண்ணமே செயல்பாடு என்பதில் உறுதியாக இருந்தார் பெரியார். அவருடைய சுயமரியாதை இயக்கத்தின் குறிக்கோள்கள் உலகளாவிய கவனம் பெற்றவை. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமையப் பாடுபடவேண்டும். எல்லாப் பொருளும் எல்லாருக்கும் சரிசமமாய்க் கிடைக்க வேண்டும். ஆண்பெண் சமத்துவம் வேண்டும்.சாதி, மதம், தேசம், வருணம், கடவுள்... ஒழித்து உலக மனித சமூக ஒற்றுமை ஏற்படவேண்டும். உழைப்பாளியும் முதலாளியும் சமம். யாருக்கும் யாரும் அடிமையில்லை என்பன உள்ளிட்டவைகளாகும்.

மனச் சாட்சி உள்ளவர்களுக்கு மட்டும்தான் புரியும் இது பண்பட்ட மண்!

**நன்றி : 'தீக்கதிர்-வண்ணக் கதிர்', ஜூன் 9, 2019**

அண்ணாவின் பகுத்தறிவு சிறுகதை

# "கருப்பண்ணசாமி யோசிக்கிறார்"



**புனிதங்களை 'பகடி'களால் கட்டுடைத்த திராவிட இலக்கியம் குறித்து பேராசிரியர் ராஜ் கவுதமன் கட்டுரை ஒன்று இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது. அந்தப் பகடி வரிசையில் அண்ணா – 1951இல் எழுதிய சிறுகதை இது. இந்த சம்பவங்கள் இப்போதும் நாட்டின் நிகழ்வுகளாக தொடர்வதை இக்கதையைப் படிக்கும் வாசகர்கள் உணர முடியும்.**

மணி ஒலித்தது.

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

கருப்பண்ணசாமி அலறிய படி உள்ளே ஓடலானார். ஒளிந்து கொள்ள இடம் தேடினார்.

'களுக்'கென ஒரு சிரிப்பொலி கேட்டது. கருப்பண்ணசாமி கோபம் கொண்டு "வேதனைப் படுகிறேன் நான், இந்த வேளையில் கேலி வேறு செய்கிறாயா?" என்று கேட்டார் சிரித்தபடி, தன் எதிரே வந்த தேவியைப் பார்த்து.

"கருப்பண்ணா, என்ன கலக்கம்? ஏன் ஓடுகிறாய்?" என்று தேவி கேட்க, கருப்பண்ணசாமி "காதிலே விழவில்லையா, மணி சத்தம்" என்று கேட்டார்.

"விழுந்தது. அது கேட்டு அச்சம் ஏன் வர வேண்டும்? ஆச்சர்யமாக இருக்கிறதே!" என்று தேவி கேட்டார்.

"உனக்கு ஒன்றும் புரிவதில்லை. யாரோ பக்தர்களல்லவா வருகிறார்கள்" என்று பயத்துடன் பேசினார் கருப்பண்ணர்.

"பைத்தியமே! பக்தர்கள் வருகிறார்கள் என்றால், பயம் ஏன் வரவேண்டும்? உன்னைத் தொழ, சூடம் கொளுத்த, சோடசோபசாரம் செய்ய, படையல் போட வருகிறார்கள் பக்தர்கள். இதற்கு ஏன் பயப்பட வேண்டும்? ஓஹோ! இவ்வளவு பூஜையை ஏற்றுக்கொண்டும் எங்கள் கஷ்டத்தைப் போக்காமல் இருக்கிறாயே கருப்பண்ணசாமி! என்று அந்தப் பக்தர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயமா?" என்றாள் தேவி.

கருப்பண்ணர், "போதும் தேவி, உன் தொல்லை. வரம் தந்து அவர்களின் குறையைப் போக்கவில்லை என்பதற்காக என் மீது சீறுவார்கள் என்ற பயம் எனக்கு இல்லை. நானென்ன தேவாலய அரசு செலுத்தி அனுபவம் இல்லாதவனா... இங்கு இல்லாவிட்டால், மேலுலகில் என்னைப் பூஜித்த பலன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக் கொள்வார்கள். இங்கே பலன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக் கொள்வார்கள். இங்கே அவர்களுக்குள்ள குறையைத் தீர்த்து வைக்காததற்காக என் மீது சீற மாட்டார்கள் என்ற சித்தாந்தம் எனக்குத் தெரியும். நான் பயப்பட்டது அதனால் அல்ல" என்று பெருமூச்சு வருமளவு வேகமாகப் பேசினார் கருப்பண்ணசாமி.

தேவியார் வேகமாகச் சென்று வாயிலில் பார்த்து விட்டு வந்து, "கருப்பண்ணா பக்தர் யாருமல்ல, காற்று

பலமாக அடித்ததால் மணி ஓசை கேட்டது. பயப்படாதே. சரி, பக்தர்கள் வருகிறார்கள் என்றால் ஏன் பயம் உண்டாகிறது உனக்கு? அதைச் சொல்லு'' என்று கேட்டார்கள். பக்தர் யாரும் வரவில்லை என்று தெரிந்ததால் தைரியம் பெற்று, தன் பீடத்தில் அமர்ந்து, எதிரே ஒரு பீடத்தில் அமர்ந்த தேவியிடம் கருப்பண்ணசாமி விளக்கம் கூறலானார்.

''தேவி, பக்தர்களால் எனக்கு ஏற்பட்ட ஆபத்தும் சங்கடமும் உனக்கு என்ன தெரியும்? வரவர இந்த 'வேலை'யிலேயே எனக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டு வருகிறது. தான் செய்த மோசத்தை அரை பலம் கற்பூரப் புகையிலே மறைத்துவிடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு நான் உடந்தையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அவனுடைய பேராசைக்கு நான் துணை போக வேண்டும் என எண்ணுகிறான். காரணம் கேட்டால், பெரிய படையலிட்டிருக்கிறேன் என்று கூறுகிறான்.''

தேவி குறுக்கிட்டு, ''இதென்ன புது விஷயமா கருப்பண்ணரே! இப்படிப்பட்ட பக்தர்களை நாம் நெடுங்காலமாகப் பார்த்து, பழகிக் கொண்டுதான் வந்திருக்கிறோம்'' என்று கூறிட, கருப்பண்ணசாமி, மனக்கொதிப்புடன், ''இப்போது பக்தர்கள் அந்த அளவோடு நின்றுவிடவில்லை தேவி - கேவலப்படுத்துகிறார்கள். போலீசின் பாதுகாப்பிலே வாழ வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்னை'' என்று கூறினார்.

''கேவலப்படுத்தினார்களா! யார்?'' என்று தேவி ஆச்சரியத்துடன் கேட்டார்.

அவரைக் கேலி செய்வதைப் போல கருப்பண்ணர், ''யார்!'' என்று ஒருமுறை கூறிவிட்டு, ''நாஸ்திகர்கள் கேவலப்படுத்தினார்கள் என்று கருதுகிறீரா தேவி! அவர்களல்ல. அவர்கள் மனிதருடன் பழகுவதும் மனிதர்களின் பிரச்னைகளைக் கவனிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள். என்னைக் கேவலப்படுத்தியது பக்தர்கள்! கைகூப்பித் தொழுது, கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்களே, கற்பூரம் கொளுத்துகிறார்களே, அந்தப் பக்தர்கள்தான், என்னை, சேச்சே! இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்கே வெட்கமாக இருக்கிறது. கேவலப்படுத்தினார்கள் - போலீசாரின் துணையால் நான் மீட்கப்பட்டேன்'' என்று கூறினார். தேவிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

''கருப்பண்ணரே என்ன பேசுகிறீர்? பக்தர்கள் - போலீஸ் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பேச்சாக இருக்கிறதே'' என்றார்.

''தேவி, கேள் இந்த விஷயத்தை. இந்தப் பக்தர்களை இன்னின்னது செய்யுங்கள் என் மனமகிழ்ச்சிக்காக, இன்னின்னது படையுங்கள் என்று நான் கேட்டதில்லை. அவர்களாகவே வருகிறார்கள். அவர்கள் மனதுக்குத் தோன்றியபடி ஏதேதோ செய்கிறார்கள். நான் சிவனே என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என் பொறுமை, பெருந்தன்மை இவற்றைக் கண்டு இந்தப் பக்தர்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிவுகொண்டு...'' கருப்பண்ணரின் தொண்டை அடைத்துக்கொண்டது துக்கத்தால்! தேவியின் ஆச்சரியம் அதிகரித்தது. ''துணிவு கொண்டு....'' என்று ஆவலை வார்த்தை களாக்கினார் தேவி. ஆத்திரத்துடன் கூறினார் கருப்பண்ணசாமி, ''ஒரு அறை யிலே போட்டுப் பூட்டி விட்டார்கள்!'' என்றார். தேவிக்கும் லேசாகத் திகில் ஏற்பட்டது.

''பூட்டி விட்டார்களா? உன்னையா? பக்தர்களா?'' என்று திகைப்புடன் தேவி கேட்டார்கள்.

''கேட்பதற்கே இவ்வளவு திகில் பிறக்கிறதே தேவியாரே! என் மனம் என்ன பாடுபட் டிருக்கும். என்னை ஒரு அறை யிலே போட்டுப் பூட்டினபோது - நான் என்ன கழனி வேலை செய்யும் கருப்பனா, 'சாமி, சாமி... விட்டுவிடுங்க' என்று கதற? நானோ அவர்கள் கும்பிட்டு வரங்கேட்கும் கருப்பண்ண ஸ்வாமி! அவர்களோ என்னையே அறை யிலே தள்ளிப் பூட்டுப் போட்டுவிட்டார்கள். நான் என்ன செய்வது?'' என்று கூறி, ஆயாசமடைந்தார் கருப்பண்ண சாமி.

தேவி உண்மையிலேயே அனுதாபப்படத் தொடங் கினார்கள். ''கேவலமான நிலைமைதான் இது. பக்தர்கள், உன்னைச் சிறையில் போடுவதுபோல அல்லவா செய்துவிட்டிருக்கிறார்கள்'' என்று பேசினார் சோகமாக.

''தேவி! உன் காதிலே, அவர்கள் அப்போது போட்ட கூச்சல் விழுந்திருந்தால் தெரிந் திருக்கும். அவர்களின் போக்கும் குணமும், போட்டுப் பூட்டடா, என்ன நடந்துவிடுதுன்னு பார்க்கலாம்'' என்று ஒருவன் கொக்கரிக்கிறான்.

''பெரிய பூட்டு கொண்டு வா'' என்று கூவுகிறான் ஒருவன்.

**“நாம் ரெண்டு பேர் மட்டும் தீர்மானித்தால் போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச்சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம் நாம் சிக்கிச் சீரழிவுபடக் கூடாது. பக்தர்கள் வேண்டாம் – என்று தீர்மானம் நிறைவேற்றினால்தான் நல்லது” என்றார் கருப்பண்ணசாமி.**

“அலிகார் பூட்டு வேண்டுமா?” என்று கேட்கிறான் இன்னொருவன். எவ்வளவு கூச்சல், துணிவு! “போட்டுப் பூட்டுங்க, பார்க்கலாம், எவன் வந்து என்ன செய்து விடுகிறான்” என்று கூவி, “தேவி! என்னைப் பெரிய அறையிலே போட்டுப் பூட்டி விட்டுப் போய்விட்டார்கள்.”

“வெளியே சிரிக்கிறார்கள் - இனி பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று! நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன் - என்னைப் போட்டுப் பூட்டிய ‘பாவி’கள் சிரிக்கிறார்களே! நான் கேட்கலாமா, அவர்களைப் பார்த்து? ‘இதென்ன அக்ரமம் - திறந்து விடுங்கள் என்னை - இல்லையானால் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வரச் செய்வேன். கைகால்களை முறித்துப் போட்டு விடுவேன்” என்று பேசலாமா! அவர்களோ பக்தர்கள்! நானோ அவர்களால் வணங்கப்படும் சாமி. தேவி! மனம் எவ்வளவு பதறி இருக்குமென்று யோசியுங்கள்” என்றார் கருப்பண்ணர்.

“கருப்பண்ணரே! அது கிடக்கட்டும், ஏன் பூட்டினார்கள்? என்ன செய்தீர்?” என்று கேட்டார் தேவியார்.

“நானா! என்ன செய்தேனோ, அவர்கள் என் எதிரேஇருந்து கொண்டு சொல்லி வந்த புளுகுகளை யெல்லாம் கேட்டுச் சகித்துக் கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு; போதும், புளுகாதீர்கள்’ என்று ஒரு தடவையாவது - ஒரு பக்தனை யாவது கண்டித் திருந்தால் அவர்களுக்கு அன்று அவ்வளவு துணிவு வந்திருக்காது” என்றார் கருப்பண்ணர்.

“உன்னை ஒரு தனி இடத்தில் போட்டுப் பூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது” என்று மீண்டும் கேட்டார் தேவியார்.

சலிப்பும் வெறுப்பும் கலந்த குரலிலே கருப்பண்ணர் சொன்னார்: “ஏன் பூட்டி வைத்தார்கள் என்றா கேட்கிறீர் தேவி! நான் அவர்களின் ‘சாமி’யாம். அதனாலே என்னை வேறே சில பக்தர்கள் கொண்டு போகாமலிருப்பதற்காக, என்னைப் போட்டு பூட்டி வைத்தார்கள். அவ்வளவு ‘பக்தி’. என்னிடம் வேறெந்த பக்தனிடமும் நான் பேசிவிடக்கூடாது அப்படி ஒரு எண்ணம்” என்றார் கருப்பண்ணர்.

“இதென்ன பைத்யக்காரத்தனமான எண்ணம்!” என தேவி கேலியாகப் பேசினார்கள். “இவர்கள் கண்டதையும் கடியதையும், வேகாததையும் பழுக்காததையும் தின்று வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் என்னை வந்து கேட்கிறார்களே, தேவி! ‘கருப்பண்ண ஸ்வாமி! என்னைக் காப்பாற்று’ என்று, பைத்யக்காரத்தனம்தானே அது. அதுபோல் இதுவும் ஒரு பைத்யக்காரத்தனம் உண்மையைச் சொல்லப்போனால், தேவி - அப்படிப்பட்ட பைத்யக்காரத்தனத்தை நாம் வளரவிட்டது தவறு இல்லையா? என் விஷயத்தைக் கேள், தேவி! இந்தப் பக்தர்களுக்கு நான் தங்களுடைய ‘சாமி’ வேறு யாரும் தங்களுடையதுன்னு ‘பாத்யதை’ கொண்டாடினாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்கிற எண்ணம் ஏற்பட்டது. அதற்குத் தகுந்தபடியே நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பக்தர்கள் கூட்டம் பெருகுவது கண்டு எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது. என் போறாத வேளை! என் பக்த கோடிகள், இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து அவர்களுக்குள்ளே தீராத பகை ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய பகை எனக்குப் பெரிய ஆபத்தாக வந்து சேரும் என்று நான் கண்டேனா - நான் என் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். வழக்கமாக எனக்கு நடத்துகிற உற்சவத்தை நடத்தினார்கள் எனக்கு மகிழ்ச்சி. தேரும் திருவிழாவும் வீண் வேலை என்று ஊருக்குள் போய்ச் சில பேர் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் பேச்சிலே மயங்கி, எங்கே என் பக்தர்கள் - இந்த வருஷம் உற்சவத்தை நடத்தாமல் இருந்து விடுவார்களோ என்று எனக்கு லேசாக பயம். அவர்கள் உற்சவத்தை வழக்கப்படி நடத்த முன்வரவே, நான் மகிழ்ச்சியடைந்தேன் - எவ்வளவு பிரச்சாரம் நடைபெற்றாலும் நமது செல்வாக்குப் போய்விடவில்லை என்று எண்ணிப் பூரித்துப் போனேன். வருஷா வருஷம் வைகாசி மாதம் உற்சவம் நடத்துவார்கள் எனக்கு. கருப்ப உடையார் தலைவர். உற்சவம் நடத்திய பக்தர் குழாத்துக்கு.

வழக்கப்படி ஊர்வலமாக என்னை அழைத்துச் சென்றார்கள். ‘பயல்களே! பகுத்தறிவு சுயமரியாதை என்று கத்திக் கொண்டிருக்கிறீர்களே - பாருங்களடா, பக்தர்கள் எனக்கு உற்சவம் கொண்டாடுவதை!” என்று கூறிட எண்ணினேன். ஆனால், அந்தப் பயல்கள் ஒருவன்கூடக் காணோம் - எங்காவது மகாநாடு போட்டிருப்பான்கள் போலிருக்கு. சந்தோஷமாகப் பவனி வந்தேன். எப்போதும்போல என்னைக் கொண்டுபோய் மண்டபத்தில் கொலுவிருக்கச் செய்தார்கள். பக்தர்கள் என்னை வந்து தரிசிக்க அதுதானே நல்ல ஏற்பாடு. நானும் மண்டபத்தில் கம்பீரமாக வீற்றிருந்தேன்.

பக்த கோடிகள் இரண்டு ‘கோஷ்டி’யாகியிருந்தனர் என்று சொன்னேனல்லவா? உற்சவம் செய்தது ஒரு கோஷ்டி - கருப்ப உடையார் கோஷ்டி; மற்றொரு கோஷ்டி பிச்ச உடையார் நடத்தி வந்தார் - அந்தக் கோஷ்டியும் என் பக்தர்கள்தான். அந்த இரண்டு கோஷ்டிகளுக்கும் பகை! இரண்டு கோஷ்டிகளுக்கும் என்னிடம் பகை ஏற்படக் காரணமே கிடையாது.

மண்டபத்தில் இருந்த என்னை மீண்டும் கோயிலுக்கு அழைத்துப் போகக் கூடிற்று கருப்ப பக்தர் கோஷ்டி.

“தூக்காதே! எடுக்காதே!” என்று கூவிற்று பிச்ச பக்தர் கோஷ்டி.

“நீங்கள் யாரடா, தடுக்க - எங்க கருப்பண்ண சாமிக்கு நாங்கள் உற்சவம் நடத்துகிறோம் - உலா முடிந்தது கொலு முடிந்தது - கொண்டு போகிறோம் கோயிலுக்கு - நீங்கள் யார் தடுக்க?” என்று கருப்ப பக்தர் கோஷ்டி பதில் கூறிற்று.

“தொடாதே!” என்று அதட்டிப் பேசினர் பிச்சை பக்தர் கூட்டத்தினர்.

“தூக்கு! தூக்குடா!” என்று அதிகாரக் குரலில் பேசினர் கருப்ப பக்தர் கோஷ்டியினர்.

“வெளியே கிளப்பினே - கொலை விழும் - ஆமாம்.”

“சூரப் புலிகளோ - தூக்குடா சாமியை.”

“வேண்டாம் - வீணா தொல்லைப்படாதீங்க.”

“கருப்பண்ணசாமி, எங்க சாமிடா!”

“இல்லே, எங்க சாமிடா, கருப்பண்ணசாமி.”

“கையை வெட்டிவிடுவேன்.”

“காலை ஒடித்துவிடுவோம்.”

“தேவி! இரு பிரிவும் இப்படிக் கொக்கரித்தன - நான் மண்டபத்திலே கொலு இருக்கிறேன்! என்னைக் கொண்டுபோய் பழையபடி கோயிலில் சேர்த்துவிட வேண்டும் என்று ஒரு பிரிவு முயலுகிறது - இன்னொரு பிரிவு, கூடாது என்று கூறித் தடுக்கிறது. நான் என்ன செய்வது! இரு பிரிவினரும் என் பக்தர்கள். நான் யார் பக்கம் சேரட்டும்? சேர முடியும்? இரண்டு பிரிவும் சண்டை போட்டுக் கொள்ளட்டும். நாம் கோயிலுக்குப் போய்த் தொலைப்போம் - இரு பிரிவின் தயவும் வேண்டாம் என்ற எண்ணம் பிறந்தது - ஆனால், எப்படிக் கோயிலுக்குப் போவது? நான்

**“நானா! என்ன செய்தேனோ, அவர்கள் என் எதிரே இருந்து கொண்டு சொல்லி வந்த புளுகுகளையெல்லாம் கேட்டுச் சகித்துக் கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு; போதும், புளுகாதீர்கள்’ என்று ஒரு தடவையாவது - ஒரு பக்தனையாவது கண்டித்திருந்தால் அவர்களுக்கு அன்று அவ்வளவு துணிவு வந்திருக்காது” என்றார் கருப்பண்ணர்.**

திண்டாடிப் போனேன் தேவி, திகைத்துப் போனேன்.

பட்டிக்காடுகளில் கலியாணத் தகராறு கிளம்பி விட்டால், ‘பெண்ணைக் கொண்டுவா’ என்று ஒரு கூட்டம் கூவ, ‘பெண்ணைக் கொண்டு போகாதே’ என்று மற்றொரு கூட்டம் கூவ, இரண்டு கூட்டத்தில் சச்சர விலே சிக்கி பெண், புலம்புவது உண்டு. என் நிலை அது போலாகிவிட்டது. ஆனால் நான் புலம்பலாம்! நானோ சாமி! என்னை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கினவர் களோ என்னைப் பூஜிக்கும் பக்தர்கள்! என்ன செய்வது நான்?

‘கோயிலிலே கொண்டு போய், ஸ்வாமியைச் சேர்ப்பது தான் நியாயம்’ என்று கருப்ப பக்தக் குழாம் கூறியபடி இருந்தது. பிச்சை பக்தர்

குழாமோ, 'விவகாரத்தைத் தீர்த்துவிட்டு, சாமியைத் தொடு - விவகாரம் பைசல் ஆகாததற்கு முன்னே தொட்டா, விட மாட்டோம்' என்று கூறுகிறது.

"அட பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அதுக்காகச் சீரழிக்கிறிங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தைப் பேசி, பைசல் செய்து கொள்ளக் கூடாதா? என்னை இப்படி அவமானப்படுத்துவது முறையா - என்று கேட்க விருப்பந்தான் - எப்படிக் கேட்க முடியும்?"

ஊரிலே இதற்குள்ளே பேசப்பட்ட பேச்சோ, கேட்டு சகிக்க முடியவில்லை.

"சாமி புறப்படலே இன்னும்."

"இல்லே - சாமியை விட மாட்டேன்னு சொல்றாங்களாம்."

"ஏனாம் - யாராம்?"

"அவுங்கதான் பிச்சை யா?"

"ஏனாம்."

"என்னமோ விவகாரம் இருக்காம். கருப்பையாவோடே அந்த விவகாரத்தைப் பைசல் செய்து ஆசாமியைத் தொடு - இல்லைன்னா விட மாட்டோம்னு பேசறாங்க."

"சாமி, மண்டபத்திலே தான் இருக்கா?"

"ஆமாம் - பாவம் - மண்டபத்திலேயேதான் இருக்கு."

"இந்நேரம் கோயில் போய்ச் சேர்ந்திருக்குமே."

"ஆமாம். விட்டாத் தானே!"

"இவர்களுக்குள்ளே சண்டைன்னா, சாமி என்ன பண்ணிச்சாம், பாவம்! அதை

**"அட பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அதுக்காகச் சீரழிக்கிறிங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தைப் பேசி, பைசல் செய்து கொள்ளக் கூடாதா? என்னை இப்படி அவமானப்படுத்துவது முறையா - என்று கேட்க விருப்பந்தான் - எப்படிக் கேட்க முடியும்?"**

மண்டபத்திலே காக்கப் போட்டு வைக்கணுமா?"

- இப்படித் தாய்மார்கள் பேசுகிறார்கள்.

சிறுவர்களோ, "டோய்! சாமி அம்பிட்டுக்கிச்சி, மண்டபத்திலே" என்று கூவித் தொலைக்கிறார்கள்.

"தேவி! கோயில் நிர்வாக சம்பந்தமாக, அந்த இரண்டு இந்தப் பிரிவுக்குள் ஏதோ தகராறாம் - அதற்காக என்னை இந்தக் கேவலப்படுத்தி னார்கள்."

'கோயில் தகராறு தீர்க்கப் பட்டாலொழிய, என்னை மண்டபத்தை விட்டு எடுத்துச் சொல்லக் கூடாது' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், 'கணக்கு வழக்கு முடிந்தாலொழிய கருப்பண்ணசாமியைக் கோயிலுக்குக் கொண்டு போகவிடப் போவதில்லை' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, 'ஏதோ பூஜை செய்கிறாங்களேன்னு பூரிப்படையறதிலே அர்த்தம் இல்லே. இனி நமக்கு அவர்கள் தயவு வேண்டாம் - சகவாசமே கூடாதுன்னு தோணிவிட்டுது' என்று கருப்பண்ணச்சாமி தன் கதையைக் கூறி முடித்தார். தேவியும் கதையைக் கேட்டுக் கலக்கம் அடைந்தார். "ஆமாம், இனி இந்தப் பக்தர்களை நம்பக் கூடாது" என்று தேவியும் தீர்ப்பளித்தார்கள்.

"நாம் ரெண்டு பேர் மட்டும் தீர்மானித்தால் போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச்சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம் நாம் சிக்கிச் சீரழிவுபடக் கூடாது. பக்தர்கள் வேண்டாம் - என்று தீர்மானம் நிறைவேற்றினால்தான் நல்லது" என்றார் கருப்பண்ணசாமி.

"ஆமாம் கருப்பண்ணரே! பக்தர்களால் நம்மவர்களுக்கு ஏற்பட்டுவரும் சீரழிவுகளையும், எத்தர்கள் ஏமாளிகளை ஏய்க்க நம்மைக் கருவியாகக் கொள்வதையும் விளக்கமாகக் கூறி, நமது நண்பர்களுக்கும் இனி இப்படிப்பட்ட இடைஞ்சல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத் தான் வேண்டும். நாம் இதற்கெல்லாம் ஒரு மாநாடு கூட்டிவிடவேண்டியதுதான். இனி பொறுக்க முடியாது. நான் வரவேற்புக் கழகத்துக்குத் தலைமை தாங்கிவிடுகிறேன் - திறப்பு விழா நீ நடத்திவிடு - தலைமைக்கு? யாரை அழைக்கலாம்?" என்று தேவியார் ஆர்வத்துடன் கேட்டார்.

"யாரை அழைக்கலாம்?" என்று கருப்பண்ணசாமியும் யோசிக்கலானார்.

(1950ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் லால்குடிக்குச் சமீபத்தில் உள்ள புஞ்சை சாங்குடி என்ற கிராமத்தில் இரு கட்சிகள் ஏற்பட்டு, கருப்பண்ணச் சாமியை மண்டபத்தில் போட்டுப் பூட்டிவிட போலீஸ் உதவியுடன் பூட்டு உடைக்கப்பட்டு சாமி கோயிலில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார் என்ற செய்தி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், ஆகஸ்ட் 22இல் வெளி வந்தது. அந்த உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு தீட்டப்பட்டது இந்தக் கற்பனைக் கதை.)

4.2.51 'திராவிட நாடு' இதழில் வெளி வந்தது.

# அயோத்தி இராமன் கோயில் -
## பாபர் மசூதி -
# வரலாறுகள் கூறுவது என்ன?



**கே.என். பணிக்கர்**

*மோடி மீண்டும் பிரதமரானதைத் தொடர்ந்து அயோத்தியில் ‘இராமன்’ கோயில் கட்டும் வேலைகளைத் தொடங்க இருக்கிறார்கள். முதற்கட்டமாக தேர்தல் முடிவுக்குப் பிறகு உ.பி. முதல்வர் ஆதித்யநாத், அயோத்தியில் இராமன் சிலையை நிறுவியிருக்கிறார்.*

*அயோத்தியில் இராமன் கோயிலை இடித்துவிட்டுத்தான் பாப்ரி மசூதி கட்டப்பட்டதா? இராமாயணத்தில் கூறப்படும் அயோத்தி இந்த அயோத்தி தானா? என்பது குறித்து அடுக்கடுக்கான வரலாற்றுச் சான்றுகள் வழியாகக் கேள்விகள் எழுந்து நிற்கின்றன.*

அயோத்தி, இராமன் பிறந்த இடம் தானா? இந்தக் கேள்வி இது தொடர்பான வேறொன்றையும் எழுப்புகிறது. இன்றைய அயோத்தி இராமாயணத்தில் குறிப்பிடப்படும் அயோத்திதானா?

இராமனுடைய கதை நிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் ‘ராமகதா’வில் சொல்லப்பட்டன. இந்த ‘இராம கதா’ இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. இந்த இராமனின் கதை நிகழ்ச்சிகளை பின்னாளில் ‘இராமாயணம்’ என்ற பெயரில் மிக நீண்ட இதிகாசமாக வால்மீகி எழுதினார். இது முழுவதும் கவிதைகளாக, செய்யுள்களாக இருந்தது. இதனாலேயே இதில் கூறப்பட்ட பாத்திரங்கள், இடங்கள் உள்பட பெரும்பாலானவை கற்பனையாக இருக்கக் கூடும்.

எனவே இதில் வரக்கூடிய பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் அல்லது இடங்களை வேறு ஆதாரச் சான்று இல்லாமல் வரலாற்றாளர் ஒப்புக் கொள்ள முடியாது. இச்சான்றும் வரலாற்றாளர்களால் அதிக நம்பிக்கைக்குரியன என்று கருதப்படும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலும் வரலாற்றுச் சான்றுகள், பரவலான நம்பிக்கைகளுடன் முரண்படுகின்றன.

வால்மீகி இராமாயணத்தின்படி, அயோத்தி மன்னன் இராமன் 'திரேதாயுக'த்தில் பிறந்தான். திரேதாயுகம் என்பது கலியுகத்திற்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள காலம். கலியுகம் கி.மு. 3102ஆம் ஆண்டில் ஆரம்ப மானது என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

1. இன்றைய அயோத்தியைச் சுற்றியுள்ள பகுதியில் இராமன் பிறந்த 'திரேதாயுகத்தில்' மனிதர்கள் வாழ்ந்ததற்கான அகழ்வாய்வுச் சான்றுகள் எதுவும் இல்லை. இந்தப் பகுதியில் குடியேற்றங்கள் நிகழ்ந்த ஆரம்ப காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டாக இருப்பது தான் சாத்தியம். இந்தப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சான்றுகள் மிகச் சாதாரண பொருளியல் வாழ்க்கையைச் சுட்டுகின்றன. இது வால்மீகி இராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளதைவிட மிகவும் புராதனமானது.

2. நகர்ப்புறச் சூழலில் அமைந்துள்ள பெருமளவிலான கட்டடங்கள், அரண்மனைகளைப் பற்றி இராமாயணத்தில் பரவலாகப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் இத்தகைய நகர்ப்புறக் கட்டட வளாகங்கள் பற்றிய விவரிப்புகள், கி.மு. 8ஆம் நூற்றாண்டு குறித்த அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உறுதி செய்யவில்லை.

3. அயோத்தியின் அமைவிடம் குறித்தும் ஒரு சர்ச்சை உண்டு. கோசல நாட்டின் பெரிய நகரங்களாக ஷரவஸ்தி, சாகேதம் ஆகியவற்றைத்தான் ஆரம்பக்கால பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றனவே தவிர அயோத்தியைக் குறிப்பிடவில்லை. கோசலத்தின் தலைநகர் சாகேதம் என ஜைன நூல்களும் குறிப்பிடுகின்றன. அயோத்தி என்ற ஒன்றைப் பற்றி மிகக் குறைந்த குறிப்புகளே காணப்படுகின்றன. அந்த அயோத்தியும் கங்கை நதிக்கரையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய அயோத்தியின் அமைவிடமான சரயு நதிப் பகுதியில் அது அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

**இன்றைய அயோத்தியைச் சுற்றியுள்ள பகுதியில் இராமன் பிறந்த 'திரேதாயுகத்தில்' மனிதர்கள் வாழ்ந்ததற்கான அகழ்வாய்வுச் சான்றுகள் எதுவும் இல்லை. இந்தப் பகுதியில் குடியேற்றங்கள் நிகழ்ந்த ஆரம்ப காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டாக இருப்பதுதான் சாத்தியம்.**

4. குப்த அரசன் ஒருவன் சாகேதம் என்ற நகருக்கு அயோத்தி என்று பெயர் மாற்றினான். ஸ்கந்த குப்தன் என்ற அரசன், கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தன்னுடைய இருப்பிடத்தை சாகேதம் நகருக்கு மாற்றிக் கொண்டு அதை அயோத்தி என்று அழைத்தான். இவன் தனக்கு விக்கிரமாதித்தன் என்று பெயர் சூட்டிக் கொண்டு, அதனை தான் வெளியிட்ட தங்க நாணயங்களிலும் பொறித்தான். இவ்வாறு இதிகாசக் கவிதையின் கற்பனையாக இருந்திருக்கக் கூடிய அயோத்தி பிற்காலத்தில் சாகேதம் நகரோடு இனங்கண்டு கொள்ளப்பட்டது. இதனால் குப்த அரசன், இராமனின் பக்தன் என்று கூறுவதாகக் கருதிவிட வேண்டிய அவசியம் இல்லை. சாகேதத்தை அயோத்தி என்று பெயர் மாற்றுவதன் மூலம், இராமன் பிறந்த வமிசமாகச் சொல்லப்படும் சூரிய வமிசத்து அரச பரம்பரையைத் தன்னுடைய தாக்குவதன் வாயிலாகத் தனக்குப் பெருமை சேர்த்துக் கொள்ள முயன்றான்.

5. ஏழாவது நூற்றாண்டுக்குப் பிறகு வந்த நூல்களில் அயோத்தி பற்றி வலுவான

குறிப்புகள் உள்ளன. கி.பி. முதல் ஆயிரமாண்டு மற்றும் இரண்டாம் ஆயிரமாண்டின் முற்பகுதி காலத்திய புராணங்கள், இராமாயணத்தைப் பின்பற்றி அயோத்தியை கோசல நாட்டின் தலைநகரம் என்றே குறிப்பிடுகின்றன. 'விஷ்ணுதர்மோத்தர மகாபுராணம் 1.240.2)

6. ஒரு வகையில், அயோத்தியின் உள்ளூர் பாரம்பரியக் கதை, அயோத்தியின் ஆரம்பம் பற்றிய தெளிவற்ற வரலாற்றினை அங்கீகரிக்கின்றது. திரேதாயுதத்திற்குப் பிறகு அயோத்தி மறைந்து விட்டது. அதனை மீண்டும் விக்கிரமாதித்தன் கண்டு பிடித்தான் என்பதுதான் அந்தக் கதை. மறைந்து போன அயோத்தியைத் தேடி அலைந்த விக்கிரமாதித்தன், தீர்த்த அரசன் எனப்பட்ட 'பிரயாக' என்பவரைச் சந்தித்தான். அயோத்தியைப் பற்றி அறிந்திருந்த அவர், அவனுக்கு அதைக் காண்பித்தார். அந்த இடத்தைக் குறித்து வைத்தான். ஆனால் பின்னர் இதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின் அவன் ஒரு சந்நியாசியைச் சந்தித்தான். அவர் அவனிடம் ஒரு பசுவையும் கன்றையும் மேயவிடுமாறு கூறினார். அந்தக் கன்று ஜென்மபூமிக்கு வரும்போது அதனுடைய மடியிலிருந்து பால் சுரக்கும் என்று கூறினார். சந்நியாசியின் யோசனையை அரசன் கடைபிடித்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தில், கன்றின் மடியி லிருந்து பால் சுரக்கத் தொடங்கிய போது பண்டைய அயோத்தியின் அமைவிடம் அதுதான் என்ற முடிவுக்கு அரசன் வந்தான் என்கிறது அந்தக் கதை.

பண்டைய புனிதமான மரபுவழிக் கதை என்று போற்றப்படுகிற அயோத்தியை 'மீண்டும் கண்டுபிடித்த' கதையானது. ஒரு குறிப்பிட்ட மத ரீதியான புனிதத் தன்மையை, அப்படியில்லாத ஒரு நகருக்கு ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். இந்தக் கட்டுக்கதைகளிலும்கூட அந்த அமை விடங்கள் ஒன்றையொன்று ஒத்தவை என்பதற்கான வழிமுறை உறுதியற்றதாகவும் தன்னிச்சையானதாகவும் தோன்றுகின்றது.

இன்றைய அயோத்தி, ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் சாகேதம் என்று வழங்கப்பட்டிருக்குமாயின் வால்மீகியின் இராமாயணத்தில் வரும் அயோத்தி கற்பனையான தாகும். அப்படியானால் இன்றைய அயோத்தியில் இராம் ஜென்மபூமியை அடையாளங் காண்பதென்பது நம்பிக்கையின்பாற்பட்டதே தவிர வரலாற்றுச் சான்றின்பாற்பட்டதல்ல.

இராம ஜென்மபூமியின் உத்தேசமான அமைவிடம் பற்றிய வரலாற்றுப்பூர்வமான உறுதியற்ற தன்மையும் புத்தருடைய பிறப்பிடத் தின் வரலாற்றுப் பூர்வமான உறுதியற்ற தன்மையும் புத்தருடைய பிறப்பிடத்தின் வரலாற்று உறுதித் தன்மையும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. புத்தர் மறைந்து இரு நூற்றாண்டுகளுக்குப் பின், லும்பினி என்ற கிராமமானது புத்தர் பிறந்த இடமாகும் என்று, அவரது நினைவாக அங்கு கல்வெட்டு ஒன்றை மௌரிய அசோகர் நிறுவினார். இந்த விஷயத்திலும், அந்தக் கிராமத்திற்கு அருகில் புத்தர் பிறந்தார் என்று மட்டும்தான் அந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. துல்லியமாக இந்த இடம் என்று கல்வெட்டு குறிப்பிட முயற்சிக்கக் கூட இல்லை.

## 2. அயோத்தி அனைத்து மதத்தினரின் 'புனிதத்தலம்'

இராம வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், பல்வேறு மதங்களுக்கும் புனிதத் தலமாக அயோத்தி இருந்து வந்திருக்கிறது.

1) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுகள் மற்றும் இதற்குப் பிந்தைய காலத்தியவை கூட அயோத்தி மக்களைப் பற்றிக் குறிப்பிடு கின்றன. ஆனால் அந்த இடத்தை இராமருடைய வழிபாட்டுடன் இணைத்து அவற்றில் ஒன்றுகூடக் குறிப்பிடவில்லை. (எப்பிகிராஃபிகா இண்டிகா 10 பக்.72; 15 பக்.143; 1 பக்.14)

2) பிக்குகளின் மடங்கள், ஸ்தூபிகள் மற்றும் ஒரு சில பௌத்தமல்லாத கட்டடங்களும் அமைந்திருந்த அந்த இடம், பௌத்தத்தின் ஒரு முக்கிய தலமாகும் என்று அயோத்தியைப் பற்றி யுவாங்சுவாங்

**சந்நியாசியின் யோசனையை அரசன் கடைபிடித்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தில், கன்றின் மடியிலிருந்து பால் சுரக்கத் தொடங்கிய போது பண்டைய அயோத்தி யின் அமைவிடம் அதுதான் என்ற முடிவுக்கு அரசன் வந்தான் என்கிறது அந்தக் கதை.**

எழுதுகிறார். புத்தர் சிறிது காலம் தங்கியிருந்ததாக நம்பப்படும் அயோத்தி, பௌத்தர்களுக்கு ஒரு புனித தலமாகும்.

3) ஜைன யாத்ரீக ஸ்தலமாகவும் அயோத்தி இருக்கிறது. ஜைனர்களைப் பொருத்தவரை, அது முதலாம் மற்றும் நான்காம் ஜைன தீர்த்தங்கரர்கள் பிறந்த இடமாகும். கி.மு. 4-3ஆம் நூற்றாண்டைய அகழ்வாய்வில் கண்டுபிடித்த சாம்பல் நிறமான, மண்கதையாலான ஜைன உருவமானது, இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பழைய ஜைன உருவங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

4) கிபி. பதினொன்றாம் நூற்றாண்டைய நூல்கள் அயோத்தியில் கோபதரு தீர்த்தம் என்ற இடத்தைக் குறிப்பிடுகின்றனவே தவிர, இராமனுடைய ஜென்மபூமியுடனான தொடர்புகள் எதையும் பற்றிக் குறிப்பிடவில்லை.

5) பதிமூன்றாம் நூந்நாண்டிலிருந்துதான் இராம வழிபாடானது பரவி இருப்பதாகத் தெரிகிறது. இராமநந்தி சமயப் பிரிவின் மெதுவான தோற்றத்தோடும் இந்தியில் இராமன் கதை எழுதப்பட்டதோடும் இராம வழிபாடு அடித்தளத்தைப் பெற்றது.

15-16ஆம் நூற்றாண்டுகளில்கூட இராம நந்திகள் அயோத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் குடியேறி யிருக்கவில்லை. இராமர் வழிபாட்டை விட சைவ சமயமே மிக முக்கியமானதாக யிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டி விருந்து தான் இராமநந்தி சாதுக்கள் இங்கு பெருமளவில் குடியேறியிருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. அதற்குப் பின் வந்த நூற்றாண்டுகளில்தான் அவர்களது கோயில்களில் பலவற்றை அயோத்தியில் அவர்கள் கட்டினார்கள்.

## 3. இராமர் கோயில் இடிப்புக்கு வரலாற்றுச் சான்று இல்லை

முன்னர் ஒரு கோயில் அமைந்திருந்த நிலத்தில்தான் பாபர் மசூதி கட்டப்பட்டிருக்கிறது என்கிற கருதுகோளுக்கு ஆதரவான வரலாற்றுச் சான்று எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை.

1) பாபருக்காக ஒரு மசூதி நிறுவப்பட்டது என்பதைக் குறிக்க, மசூதியினுடைய கதவின் இரு பக்கங்களிலும் பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டுள்ளதில் இருக்கும் வரிகளைத் தவிர, வேறெந்த மூலச் சான்றும் அங்கு கிடையாது. பாபர் நாமாவை முதன்முதலில் மொழி பெயர்த்த திருமதி பெவரிட்ஜ், மேற்சொன்ன பாரசீக மொழியிலான வரிகளையும், அவற்றின் மொழி பெயர்ப்பையும் அந்த நூலில் பின்னிணைப்பாகக் கொடுத்துள்ளார். அதன் முக்கியப் பகுதி பின்வருமாறு:

“விண்ணுலகத்தை எட்டும் வகையில், நீதியை நிலைநாட்டிய பேரரசர் பாபரின் ஆணைப்படி நல்லிதையம் படைத்த மீர் பாகி என்பவர், தேவ தூதர்கள் வந்திறங்கும் இடமாக இதைக் கட்டினார். பவத் (புவத்) கெயிர் பாகி (இந்நற்செயல் நீடித்து நிலைக்கட்டும்) (பாபர் நாமா, ஏ.எஃப் பெவரிட்ஜ் மொழி பெயர்ப்பு 1922, II, பக். LXXVIIFF)

பாபர் அவையின் அறிஞரான மீர் பாகி என்பவர் இந்த மசூதியைக் கட்டியதாக மட்டுமே அந்தக் கல்வெட்டு கூறுகிறது. ஒரு கோயில் இருந்த இடத்தில் இந்த மசூதி கட்டப்பட்டதாக இதில்வரும் எந்த வரியும் கூறவில்லை. அயோத்தியிலுள்ள எந்தக் கோயிலையும் இடித்ததாக பாபர் நாமாவில் எந்தக் குறிப்பும் இல்லை.

2) அயின்-இ-அக்பரியானது, “திரேதாயுகத்தில், ஆன்மிக ஆற்றலும் அரச பதவியும் கொண்ட இராமச்சந்திரனின் இருப்பிடமாக அயோத்தி இருந்தது” என்று குறிப்பிடுகிறது. ஆனால், இராமன் கோயில் இருந்த இடத்தில், இந்நூலாசிரியரின்

பாட்டனாரை ஆதரித்ததவரால் மசூதி அமைக்கப்பட்டது பற்றி குறிப்பெதுவும் இதில் காணப்படவில்லை

3) அக்பரின் சமகாலத்தவரும் இராம பக்தரும் அயோத்தியில் குடியிருந்தவருமான துளசிதாஸ், இராம ஜென்மபூமி இருந்த இடத்திலிருந்து இந்துக் கோயிலை இடித்ததாகக் கூறவில்லை. தீவிர இராம பக்ரான இந்தியில் இராமாயணத்தை எழுதிய துளசிதாஸ், தனது காலத்தில் கோயில் இடிக்கப்பட்டிருக்குமானால், வெகுண்டு எழுத்திருக்க மாட்டாரா?

4) இந்தக் கதை 19ஆம் நூற்றாண்டில்தான் பரவியது. அச்சமயம்தான் இந்தக் கதை, அரசாங்கப் பதிவேடுகளிலும் இடம் பெறுகிறது.

பிரிட்டிஷ் ஆட்சிகால பதிவேடுகளில் கோயில் இடிக்கப்பட்டதாகக் கூறப்படும் கதை, வரலாற்றுப்பூர்வமான உண்மைகளை ஆராயாமல் அப்படியே கூறப்பட்டுள்ளது என்று அரசு ஆவணங்கள் தெரிவிக்கின்றன. (ஆதாரம் பி. கார்நேகி-ஹிஸ்டாரிகல் ஸ்கெட்ச் ஆஃப் பைஸாபாத் தாசில், பைஸாபாத் ஜில்லா, லக்னோ, 1870; ஹெச்.ஆர். நெவில், பைஸாபாத் மாவட்ட கெஜட், அலாகாபாத், 1905)

மேலே கூறப்பட்டுள்ள மொழி பெயர்க்கப் பட்ட பகுதிக்கு எழுதியுள்ள ஓர் அடிக்குறிப்பில், இக்கதையில் தனக்குள்ள நம்பிக்கையை திருமதி பெவரிட்ஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

முஸ்லிமான பாபர், "பழைய இந்துக் கோயிலின் மேன்மையினாலும், புனிதத்தினாலும் ஈர்க்கப்பட்டு", "குறைந்தபட்சம் ஒரு பகுதி" கோயிலையாவது இடித்துவிட்டுத்தான் மசூதியை எழுப்பியிருப்பார் என்று திருமதி பெவரிட்ஜ் என்ற ஆய்வாளர் அனுமானத்தின் அடிப்படையில் கூறுகிறார். அவருடைய வாதம் ஏற்கத்தக்கது அல்ல. "அதாவது பாபர், முகமது நபியைப் பின்பற்றும் ஒரு முஸ்லிம் ஆகையால் அவர் வேறு எந்த மதத்தையும் சகிக்கும் தன்மை இல்லாதவர். ஆகவே, கோயிலுக்குப் பதிலாக மசூதியைக் கட்டுவதை ஒரு கடமையாகவும் பயனுள்ள தாகவும் கருதியிருப்பார்" என்பதே அந்த வாதம்.

**இன்றைய அயோத்தியில் இராம் ஜென்மபூமியை அடையாளங் காண்பதென்பது நம்பிக்கையின்பாற்பட்டதே தவிர வரலாற்றுச் சான்றின்பாற்பட்டதல்ல.**

இது மிகவும் கேள்விக்குரிய ஓர் அனுமானமாகும்; ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவரின் தன்மையும் நடத்தையும் இப்படித்தான் இருக்கும் எனப் பொதுமைப்படுத்தும் முறையிலிருேந்தே இந்த அனுமானம் உண்டாகியிருக்கிறது. ஒரு கோயில் இருந்த இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டது என்ற தனது கூற்றுக்கு எந்த வரலாற்றுச் சான்றையும் திருமதி பெவரிட்ஜ் கொடுக்கவில்லை. உண்மையில் பிற மதங்களின் வழிபடும் இடங்களைக் குறித்த பாபர் அரசின் கொள்கைகள், திருமதி பெவரிட்ஜின் ஊகத்தை சிறிதும் நியாயப்படுத்தும் வகையில் இல்லை.

இந்தியாவை ஒன்றுக்கொன்று பகையுணர் வுள்ள பல சமயப் பிரிவினரைக் கொண்ட ஒரு நாடாகக் கருதி சித்தரித்துக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு, இத்தகைய கதைகள் சுயச்சான்றுகள் கொண்டவையாகத் தோன்றி யிருக்கலாம். ஆனால் வரலாற்றாளர்களோ எதையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியிருக் கிறது. ஒவ்வொரு வரலாற்றுக் கூற்றின் நம்பகத் தன்மையையும் அதன் ஆதார மூலங்களையும் கூர்ந்து ஆராய வேண்டியிருக்கிறது.

ஒரு கோயிலை இடித்து அவ்விடத்தில் பாபர் மசூதி கட்டப்பட்டதற்குச் சான்று இல்லை என்பது ஒருபுறமிருக்க, அம்மசூதி, மத்திய கால வரலாற்று மூலங்களின்படி இஸ்லாமிய மதரீதியிலோ அல்லது பண்பாட்டு ரீதியிலோ பெரிய மகத்துவம் கொண்ட ஒன்றாக முஸ்லிம்களால் கருதப்படவில்லை.

இஸ்லாமிய மன்னர்கள் இயல்பாகவே எப்போதும் இந்துக்களின் புண்ணியத் தலங்களுக்கு எதிராக நடந்து கொண்டனர் என்பதும் ஊகங்களே தவிர, வரலாற்றுச் சான்றுபூர்வமானதல்ல.

1. முஸ்லிம் நவாபுகளின் ஆதரவு, அயோத்தி ஒரு புண்ணியத்தலமாக வளர்வதற்கு மிகவும் முக்கியமாக இருந்தது. காயஸ்தர்களது ஒத்துழைப்பைச் சார்ந்து நவாப் அரசு செயல்பட்டது என்றும் அவர்களது இராணுவத்தில் சைவ நாகர்களின் செல்வாக்கு அதிகமிருந்தது என்றும், சமீபகால ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது. கோயில்களுக்கு ஆதரவு கொடுப்பதும், தானங்கள் அளிப்பதும் நவாப் ஆட்சியதிகாரத்தைச் செலுத்தும் முறையோடு ஒன்றிணைந்த பகுதியாக இருந்தன. நவாப் சப்தர்ஜங்கின் திவான், அயோத்தியில் பல கோயில்களைக் கட்டியும், பழுது பார்த்து சீர் செய்தும் உள்ளார். அயோத்தியில் அனுமான் மலையில் கோயில் கட்ட சப்தர்ஜங், "நிர்வாண ஆக்கார"வுக்கு இடம் வழங்கினார். அனுமான் மலையில் கோட்டை போலமைந்த கோயிலைக் கட்ட அசஃப் உத்தௌலாவின் திவான் உதவி செய்துள்ளார். இந்து சந்நியாசிகளால் நடத்தப்பட்ட மதச் சடங்குகளுக்கு, நவாபின் சபையிலுள்ள முஸ்லிம் அதிகாரிகள் பல தானங்கள் வழங்கியுள்ள செய்திகளை பண்டாக்களின் பதிவேடுகளில் காணலாம்.

2) இந்து-முஸ்லிம் சச்சரவுகளின்போது முஸ்லிம் அரசர்கள் முஸ்லிம்களையே எப்போதும் ஆதரிக்கவில்லை. அனுமான் கோயிலைப் பற்றி அயோத்தியில் 1855இல் சன்னி முஸ்லிம்களுக்கும் நாக சாதுக் களுக்குமிடையே ஒரு சச்சரவு ஏற்பட்ட போது, உறுதியான, இறுதியான நடவடிக்கை ஒன்றை வாஜித் அலி ஷா எடுத்தார். மாவட்ட அதிகாரி ஆகா அலி கான், முக்கியமான இந்து நில உரிமையாளர் ராஜா மான்சிங், பிரிட்டிஷ் கம்பெனியாரின் சேனைக்குப் பொறுப்பாளராயிருந்த இங்கிலாந்து அதிகாரிகள் ஆகியோரடங்கிய முத்தரப்பு விசாரணைக் குழு ஒன்றை அமைத்தார். பேச்சுவார்த்தை மூலமான உடன்பாடு, வகுப்புவாதம் உருவாவதைத் தடுக்கத் தவறியபோது நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர, முஸ்லிம் தலைவர்களின் ஆதரவை வாஜித் அலி ஷா திரட்டினார். முஸ்லிம் வகுப்புவாத சக்திகளின் தலைவரான மௌலவி அமீர் அலியின் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அமீர் அலியினால் வழி நடத்தப்பட்ட சன்னி முஸ்லிம் பிரிவினரை ஒடுக்க இறுதியாக இராணுவத்தை வரவழைத்தார்; இதில் முன்னூறிலிருந்து நானூறு பேர் வரைக் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையே சச்சரவுகளே இல்லை என்பதல்ல; எந்த ஒரு மதத்திலும் ஒரே வகுப்பினராகவும் இல்லை. ஒரு வகுப்பினரிடையே உள்ள பிரிவுகளுக்கும் குழுக்களுக்கும் இடையே பகைமை இருந்தபோதே, வெவ்வேறு வகுப்பினரிடையே ஒற்றுமையும் இருந்தது.

இந்து மற்றும் முஸ்லிம் வகுப்புவாத சக்தி களின் கோரிக்கைகளுக்கு வரலாற்று அங்கீகாரம் கிடையாது என்பதை மேற்கண்ட வரலாற்றுச் சான்றின் ஆய்வு தெரிவிக்கிறது. ஒரு புனித தலம் என்ற வகையில் அயோத்தியின் தனித்தன்மை, பல நூற்றாண்டுகளாக மாறிக் கொண்டே வந்திருக்கிறது. பல மதங்களின் வரலாற்றுடனும் அது பிணைக்கப்பட்டுள்ளது. பல வகுப்பினர்கள் அவரவர்க்குச் சொந்தமான புனிதத் தன்மையை அதற்கு வழங்கியுள்ளனர். அந்த நகரம் தமக்கு மட்டுமேயான புனிதத் தலம் என்று எந்தவொரு வகுப்பும் உரிமை கோர முடியாது.

எந்த ஒரு சமுதாயமும் வரலாறுகளை தனக்குரிமையாக்கி பெருமையடைவது ஒரு தொடர் நிகழ்வாகவே இருக்கிறது. இந்தியா பல்வேறு மதம், கலாச்சாரங்களைக் கொண்ட நாடு. இப்படி ஒரு நாட்டில் இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கட்டமைக்கும் வகுப்புவாதக் கண்ணோட்டத்தோடு, 'இந்து' பாரம்பரியப் பெருமையை முன்னிறுத்தத் தொடங்கினால், நாடு - மதக் கலவரத்திலேயே மூழ்கிப் போய் சமூக ஒருங்கிணைவையும் முன்னேற்றத்தையும் சிதைத்து விடும்.

(கே.என்.பணிக்கர், இந்தியாவின் தலைசிறந்த வரலாற்று அறிஞர். புதுடெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆய்வு மய்யத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். 'வகுப்புவாத அச்சுறுத்தலும் மதச்சார்பின்மை சவால்களும்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது இக்கட்டுரை.)

# *வாசகர்களிடமிருந்து...*




'செம்மொழித் தமிழ் மீது நஞ்சு கக்கும் நாகசாமி' தலைப்பில் வெளி வந்த இரண்டு தொடர்களும் நாகசாமிக்கு மறுப்பு என்பதையும் தாண்டி மொழியியல் குறித்த சிறப்பான தகவல்களைக் கொண்டிருந்தன. 'மனு நீதிக்கும் திருக்குறளுக்கும்' உள்ள வேறுபாட்டை நாவலர் நெடுஞ்செழியன் நூல்களிலிருந்து ஓ. சுந்தரம் எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பு. 'பிராமி' எனும் பண்டைய எழுத்து வடிவ முறையை 'பிராமணர்கள்' தான் கண்டுபிடித்தார்கள் என்றால், தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்துக்கு, ஏன் தனியாக எழுத்து வடிவத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற கேள்விக்கு பார்ப்பனர்கள் என்ன பதிலைக் கூறுவார்கள்?

**– மலர்விழி, மஞ்சக்குப்பம்**

மருத்துவமனையிலிருந்து பெரியார் பொதுக் கூட்டம் பேசச் சென்ற நிகழ்வை அவரது உதவியாளர் புலவர் இமயவரம்பன் பதிவு செய்திருந்ததைப் படித்தேன். இப்படியும் ஒரு தலைவரைப் பெற்றிருந்தோமே என்ற பெருமித உணர்வுதான் மேலிட்டது. பார்ப்பனர்களை எதிர்த்த போராட்டத்தில் பெரியார் வெற்றி பெற்றதற்கு அவர் பொது வாழ்க்கையில் உறுதியாகப் பின்பற்றிய நேர்மை, பொது ஒழுக்கம், ஒளிவு மறைவு அற்ற, இராஜ தந்திரம் இல்லாத வெளிப்படையான அணுகுமுறைகள் தான். பெரியார் தொண்டின் அவசியத்தை அக்காலத்தில் அவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர்களும் புரிந்து வைத்திருந்ததையும் இக்கட்டுரையால் உணர முடிந்தது.

**– அருண்குமார், இராயப்பேட்டை**

'இராமன் பிறந்த இடம் அயோத்தியா?' என்ற எட்வின் பிரபாகரன் கட்டுரை ஏராளமான வரலாற்றுத் தகவல்களை முன் வைத்திருக்கிறது. புத்த மார்க்கம் செழித்து வளர்ந்த 'சாகேதா' என்ற பகுதி தான் புஷ்ய மித்திர சுங்கன் ஆட்சி காலத்தில் அழிக்கப்பட்டு, அயோத்தியாக்கப்பட்டு, பாசர், காளிதாசர் போன்ற பார்ப்பன கவிஞர்கள் பொய்யான சமஸ்கிருதப் பாடல்களை உருவாக்கி சாகேதா நகரத்தை 'அயோத்தியாக' மாற்றினார்கள் என்ற வரலாற்று உண்மையை கட்டுரை ஆதாரங்களுடன் பதிவு செய்திருக்கிறது.

**– மு. கண்ணன், திருச்சி**

இந்து பார்ப்பனிய பயங்கரவாதத்தோடு, 'அய்.எஸ்.அய்.எஸ்.' மத பயங்கரவாதத்தையும் அம்பலப் படுத்திய 'நிமிர்வோம்' இதழுக்குப் பாராட்டு. பயங்கரவாதம் எந்த மதத்திலிருந்து வெளிப்பட்டாலும் அதைக் கண்டித்தேயாக வேண்டும். இந்தியாவில் புறக்கணிப்புக்கு உள்ளாகும் இஸ்லாமியர்களுக்கு குரல் கொடுப்பதில் எவ்வளவு நியாயம் இருக்கிறேதா, அவ்வளவு நியாயம் இஸ்லாமியர்களுக்கு கடும்பாதிப்புகளை உருவாக்கி வரும் 'அய்.எஸ்.அய்.எஸ்.' பயங்கரவாதத்தை எதிர்ப்பதிலும் இருக்கிறது.

இலங்கையில் நடந்த குண்டுவெடிப்புகளால் இப்போது இலங்கை அமைச்சரவையில் உள்ள இஸ்லாமிய அமைச்சர்கள் அனைவருமே பதவி விலகும் நிலை உருவாகிவிட்டது. சிங்களப் பேரினவாதம் இதில் வெற்றி பெற்றுவிட்டது. இந்தியாவின் பார்ப்பனிய சக்திகளும் வரவேற்று மகிழும் நிலை உருவாகிவிட்டது.

இலங்கை இஸ்லாமிய பெண் எழுத்தாளர்கள் துணிவுடன் பயங்கரவாதத்தை எதிர்த்து எழுதியிருப்பதை யும் பாராட்டி வரவேற்க வேண்டும்.

**– டி. முரளிதரன், செவ்வாய்ப்பேட்டை**

'அழகர்சாமி'யின் வரலாறு இளைய தலைமுறைக்கு தெரியாத செய்திகள். சுயமரியாதைப் போராட்டக்களத்தில் நின்ற வீரர்களின் வரலாறுகளை 'நிமிர்வோம்' தொடர்ந்து வெளியிட வேண்டும்.

**–பாஸ்கரன், நெல்லை**

கோட்சேக்களோடு பார்ப்பன பயங்கரவாத இயக்கம் முடிவடைந்துவிடவில்லை. சனாதன் சன்ஸ்தா, பஜ்ரங்தள், ஹிந்து யுவவாஹினி, அபினவ் பாரத், போன்சாலா மிலிட்டரி ஸ்கூல் என்று பல்வேறு போர்வையில் இயங்கி வருவதை வரலாற்றுப் பின்னணியிடுன் ஆங்கில நூலை ஆதாரமாகக் கொண்டு சிறப்பாக விளக்கியிருந்தார் துரை.

**– செந்தில், சென்னை–18**




Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN